# விடுதலைப்புலிகள்

குரல் 13 | 1990 சித்திரை 15ம் திகதி | அன்பளிப்பு: ரூ 5


# பிரபாகரனின் பிரகடனம்

எமது தலைவர் திரு வேலுப்பிள்ளை பிரபாகரன் இம்மாதம் முதலாம் திகதி உள்ளூர் பத்திரிகையாளர் மத்தியில் தோன்றி, இன்றைய அரசியல் சூழ் நிலையில் எமது இயக்கத்தின் நிலைப்பாடுகளை எடுத்து விளக்கினார். பத்திரிகையாளர் மத்தியில் பிரபாகரன் விடுத்த அறிக்கை இயக்கத்தின் கொள்கைப் பிரகடனமாக அமைந்தது.

*தலைவர் திரு. பிரபாகரன் விடுத்த அறிக்கை வருமாறு:*



இன்று எமது விடுதலைப் போராட்டம் ஒரு புதிய வரலாற்றுத் திருப்பத்தை எதிர்கொண்டு நிற்கிறது.

இந்திய இராணுவத் தலையீட்டை நாம் வெற்றிகரமாக முறியடித்துள்ளோம். இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் எமது தாய் மண்ணிலிருந்து முற்றாக வெளியேறிவிட்டது இந்திய வல்லாதிக்கத் தலையீட்டிற்கு ஒருமுடிவு காணப்பட்டமை, எமது விடுதலைப் போராட்டத்திற்குக் கிட்டிய ஒரு மகத்தான வெற்றியாகும். ஏனென்றால், எமது விடுதலைப் போராட்டத்தை நசுக்கி, அப்போராட்டத்தின் எழுச்சி வடிவமான எமது இயக்கத்தை அழித்துவிடவே இந்திய இராணுவம் இங்கு அனுப்பப்பட்டது. இந்தநோக்கத்தை நிறைவேற்றும் முகமாகவே இந்தியா எம்மீது முழு அளவிலான ஒரு யுத்தத்தை கட்டவிழ்த்துவிட்டது.

இந்த யுத்தமானது உலக வரலாற்றிலேயே ஒரு முக்கியம் வாய்ந்த நிகழ்வு. ஆசியாவின் ஒரு பெரிய வல்லரசை எதிர்த்து ஒரு பாரிய இராணுவ சக்தியை எதிர்த்து, இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக நாம் இரத்தம்சிந்திப் போராடினோம். இந்த யுத்தத்தில் எமது போராளிகளும், பொது மக்களும் செய்துள்ள அற்புதமான தியாகங்கள் உலக வரலாற்றில் ஓர் ஒப்பற்ற வீர காவியமாகப் பொறிக்கப்பட்டு விட்டது. ஒடுக்கப்பட்ட மக்களின் நியாயபூர்வமான போராட்டத்தை. அவர்களின் சுதந்திர தாகத்தை எந்த ஒரு சக்தியாலும் அடக்கிவிடவோ, அழித்துவிடவோ முடியாதென்பதை இந்த யுத்தத்தில் நாம் ஈட்டிய வெற்றி உலகிற்கு ஓர் உன்னத உதாரணமாக அமைந்துவிட்டது.

"இந்தியாவின் இராணுவத் தலையீடும், அதன் விளைவாக ஏற்பட்ட பேரழிவுகளும் தமிழீழ மக்களுக்கு ஒரு நல்ல பாடத்தைப் புகட்டியிருக்கிறது. அதாவது, நாம் எந்த அந்நிய சக்திகளிலும் தங்கியிராது. எமது உரிமைகளை நாமே போராடி வென்றெடுக்கவேண்டும் என்பதுதான் இந்தப் பாடம். இந்திய அரசுக்குத் துணைபோன துரோகக் கும்பல்களும் இந்த அரசியல் உண்மையை இப்பொழுது உணர்ந்திருப்பார்கள் என நம்புகிறேன்.

நாம் இந்திய அரசுக்கோ, இந்திய மக்களுக்கோ விரோதிகள் அல்லர். முந்திய இந்திய அரசின் தவறான கொள்கையையும், இராணுவத்தலையீட்டையுமே நாம் எதிர்த்தோம். எமது பிரச்சனையில் இந்திய அரசு இராணுவ ரீதியாகவோ அல்லது அரசியல் ரீதியாகவோ தலையிடுவதை நாம் விரும்பவில்லை. எமது மக்களின் நியாயபூர்வமான போராட்டம், இந்தியாவின் அரசியல் பூகோள நலன்களுக்கோ அல்லது உள்நாட்டு ஸ்திரநிலைக்கோ பங்கம் விளைவிக்காது என்பதை டில்லி ஆட்சிபீடம் உணரவேண்டும். இந்தப்புரிந்துணர்வின் அடிப்படையில் புதிய இந்திய அரசு எமது இயக்கத்துடன் நல்லுறவை வளர்த்துக்கொள்ள முன்வரவேண்டும், எமது மக்களின் நியாயபூர்வமான போராட்டத்திற்கு இந்திய அரசும், இந்திய மக்களும் ஆதரவையும் அங்கீகாரத்தையும் வழங்கவேண்டும் என்பதே எமது விருப்பம்.

கிட்டத்தட்ட ஒரு வருட காலமாக சிறி லங்கா அரசுடன் நாம் சமாதானப் பேச்சுக்களை நடத்திவருகிறோம் இந்தப் பேச்சுகள் பரஸ்பர நம்பிக்கையுடன் ஆக்கபூர்வமான முறையில் முன்னேற்றம் கண்டு வருவதையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன் இந்த சமாதானப் பேச்சுக்களின் பயனாக இன்று

(4-ம் பக்கம் பார்க்க)

## எம்மீது சுமத்தப்பட்ட வரலாற்றுக் கடமையை

### செய்து முடித்துள்ளோம்...

தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை இந்திய வல்லாதிக்கப் பூதத்திடமிருந்து காப்பாற்ற வேண்டிய வரலாற்றுக் கடமை எம்மீது சுமத்தப்பட்டது. எமது கடமையை எமது போராளிகளினதும் மக்களினதும் அளப்பரிய தியாகங்களால் நாம் செய்துமுடித்துள்ளோம்.

எமது தேசிய விடுதலைப் போராட்டத்தில் நாம் எத்தனையோ தடைகளை சந்தித்திருக்கிறோம். நாம்சந்தித்த மிகப் பெரிய தடை இந்திய ஆக்கிரமிப்பாகும். இந்திய ஆக்கிரமிப்புடன் விடுதலைப் புலிகள் இயக்கம் அழிக்கப்படும். தமிழ் பேசும் மக்களின்தேசிய விடுதலைப் போர் அழிக்கப்படும் என்றேஉலகம் எதிர்பார்த்தது. எமது இயக்கத்தின் தலைவர் திரு. வே. பிராகரனின் வழிநடத்தலாலும், உறுதிமிக்க எமது போராளிகளினதும் மக்களினதும் போராட்டத்தாலும் இந்

(4ம் பக். பார்க்க)



www.eelamview.com

## புலிகளின் குரல்

# எழுச்சி நாள்

பங்குனி (மார்ச்) 24.

32 திங்கள் எமது தாய்மண்ணில் வீசிய இந்திய வல்லாதிக்கப் புயல் ஓய்ந்த நாள்.

32 திங்கள் தமிழீழம் போராடியது.

600க்கு மேற்பட்ட இந்திய முகாங்கள் ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட ஆக்கிரமிப்புப்படைகள்.

தமிழீழம் போர்க்களமாகியது.

தனது கௌரவத்தை சுதந்திரத்தை இழக்க மறுத்து, தமிழீழம் போராடியது. வெற்றியும் கண்டது.

அன்னை பூபதியின் இரண்டாவது ஆண்டு நினைவு நாளான எதிர்வரும் பத்தொன்பதாம் திகதியை (19. 4. 1990) தமிழீழத்தில் இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிரான வெற்றியைக்கொண்டாடும் எழுச்சி நாளாகவும் எமது அமைப்பு பிரகடனப்படுத்துகின்றது

இந்த நாளில் கடந்த காலம் கற்றுத் தந்த சில பாடங்களை நினைவு கூருவோம்.

தமிழீழ மக்கள் ஆயுதமேந்திப்போராட முடியாதவர்கள், முடியாது என்று தமிழ் பேசும் மக்களே தம் வலிமையை உணராத காலம் ஒன்று இருந்தது.

பதினெட்டு வருட கரந்தடி (கெரில்லா) போராட்ட வரலாற்றில், ஒருசிலரோடு ஆரம்பிக்கப்பட்ட எமது அமைப்பு இன்று பல்லாயிரக்கணக்கான போராளிகளை கொண்டிருக்கிறது.

சிங்கள இராணுவத்தோடு மட்டுமல்ல, இந்திய இராணுவத்தோடும் மோதி வெற்றி அடைந்திருக்கின்றது.

உலகிலேயே மிகச்சிறந்த கட்டுக்கோப்பான கரந்தடிப்படை என்ற அங்கீகாரத்தையும் பெற்றிருக்கிறோம்.

உறுதியான தலைமையின் கீழ். கட்டுக்கோப்பான, மனோவலிமையும் இலட்சியப்பற்றும், தியாக உணர்வும் ஒருங்கே அமையப் பெற்ற போராளிகளைக் கொண்ட எமது அமைப்பு

சமூக ஏற்றத் தாழ்வுகள் –

சாதிய வேறுபாடுகள் –

பிரதேச வேறுபாடுகள் —

தமிழர் - முஸ்லீம்கள் என்றபேதம் –

பெண்கள் இரண்டாம் தரமானவர்கள் என்ற நிலை ஆகியவற்றிற்கு அப்பாற்பட்டுநின்று போராடியது தமிழீழம் தமிழ் முஸ்லீம்மக்களின் தாயகம். இதை யாரும் ஆக்கிரமிக்க அனுமதிக்க மாட்டோம் என்று போராடியது.

ஆனால் எமது போராட்டத் தாக்கங்கள், சமூகத்தைப் பாதித்திருந்தாலும் எமது சமூகம், இந்த பேதங்களை வேற்றுமைகளையெல்லாம் களைந்து விடவில்லை, மறந்து விடவில்லை.

இன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு, 'விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி' என்னும் பெயரில் ஓர் அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

எமது போராட்டத்தில் முதுகெலும்பாக நின்று ஆதரவு தந்த தமிழீழமக்கள் முழுமையாக எம்மோடு இணைந்து நின்று வேலை செய்ய, இந்தக் கட்சி அமைப்பு பயன்படும்.

பரந்துபட்ட மக்களின் ஆதரவுடன் அமைக்கப்படும் இவ்வமைப்பு எமது சுயநிர்ணய உரிமைக்காக அரசியல் ரீதியாகப் போராடும், அதே வேளை எமது சமூகத்தில் உள்ள பேதங்கள், வேறுபாடுகளைக் களையவும் எமது மக்களின் சமூக பொருளாதாரத்தை வளர்க்கவும் உழைக்கும்

அன்புக்கும் மதிப்புக்கும் உரிய தமிழீழ மக்களே!
இது உங்கள் இயக்கம்.

இது உங்கள், உங்கள் பிள்ளைகளின் இரத்தத்தால் வளர்க்கப்பட்ட ஓர் மாபெரும் இயக்கம்.

இந்த இயக்கத்தில், பழைய சமூக ஏற்றத்தாழ்வுகள், சாதியவெறி, பிரதேச வேறுபாடு, தமிழ் - முஸ்லீம் என்ற பேதம், பெண் ஒடுக்குமுறை இவற்றில் ஊறியவர்களுக்கு இடமிருக்க முடியாது;

இவ்வகையானவர்களை ஊடுருவவும் அனுமதிக்க முடியாது

- எதிர் வரும் எழுச்சி நாளில் -
- சமூக ஏற்றத் தாழ்வை ஒழிப்போம்
- சாதியத்தைக் களைவோம்
- பிரதேச வேறுபாட்டை மறப்போம்
- தமிழர் - முஸ்லீம் பேதத்தை ஒழிப்போம்
- பெண்கள் ஒடுக்கு முறையை இல்லாது அழிப்போம்.
- தமிழ் முஸ்லீம் மக்களின் தாயகம் பிரிக்க முடியாதது
- தமிழ் முஸ்லீம் மக்களின் சுயநிர்ணய உரிமை எமது பிறப்புரிமை
- அந்நியனுக்கு எமது மண்ணில் இடமில்லை
- எமது சுதந்திரததையும், கௌரவத்தையும் யாருக்கும் விட்டுக் கொடோம் என முழங்குவோம்,

# அன்னைபூபதிபுகழாரமல்ல
# தமிழீழத்தின் புத்துயிர்

1988 ஆம் ஆண்டு சித்திரை 19 ஆம் நாள்

உலக வரலாற்றில் ஒரு முதல் நிகழ்வு, ஓர் ஒப்பற்ற அன்னையின் தியாகம். தனது மண்ணின் மீட்சிக்காக - அன்னிய ஆக்கிரமிப்பு சக்திகளுக்கெதிராக - அகிம்சையின் உயிர் வடிவான சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை மேற் கொண்டு மரணித்த முதற் பெண் மணி - அன்னை பூபதி.

அன்னியப் படைகளின் துப்பாக்கி முனைகளுக்கு மத்தியிலும் ஆர்ப்பரித்தனர் - மக்கள். சோகத்தின் நிழல் படிந்த அவர்களின் மனங்களில் கோபத்தின் எழுச்சி விடுதலை உணர்வின் உந்துதல் தம் தாயை இழந்து விட்டதற்காக அவர்கள் குமுறிக் கொண்டிருந்தார்கள்.

காந்தியம்

சாகடிக்கப்பட்டது

முப்பது நாட்கள் அந்த ஆலய முன்றில் உணவை மறுத்து - ஒரு ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டம் நடந்தது. இந்திய அரசு மீண்டும் ஒரு முறை காந்தியத்தை சாகடித்தது 1939ம் ஆண்டு தை 10ந் திகதி கருவேப்பன் கேணியில் பிறந்த அன்னை பூபதியின் உடல், பிறந்த மண்ணோடு கலந்தது.

மக்கள்

கிளர்ச்சி

இந்தியப் படையின் கொடுமையான ஆயுத அடக்கு முறைக்குள்ளும் அகிம்சை வடிவில் மக்கள் போராடினார்கள்.

இந்தியாவே யுத்தத்தை நிறுத்து! எம்தேசத்தை விட்டு வெளியேறு:- உரத்த குரலில் மக்கள் முழங்கினர், மக்களின் குரல் இந்தியப் படைகளின் காதுகளில் விழுந்தன ஆனால் அக் குரல் நசுக்கப்பட்டது.

மட்டக்களப்பு - அம்பாறை பகுதிகளில் இந்தியப் படையின் அடக்கு முறையின் உச்சக் கட்டத்தில் இரு கோரிக்கைகளை முன் வைத்து அன்னையர்கள் போராடத் தொடங்கினார்கள்

''புலிகளுடன் பேச்சு வார்த்தை நடாத்தி நியாயமான தீர்வொன்றைக்கான இந்தியா முன்வர வேண்டும்''

இக் கோரிக்கைகளை முன் வைத்து நடந்த போராட்டங்களின் தொடராக அன்னையர் இருவர் சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார்கள். அப் போராட்டத்தில் மக்கள் அனைவரும் ஒன்று திரண்டனர். தமிழீழம் எங்கும் கிளர்ச்சி அலைகள் பரவின, உலகின் கண்களுக்கு இந்தியாவின் உண்மை வடிவம் தெரிய ஆரம்பித்தது.

ஓய்ந்த புயல்
சூறாவளியானது

அன்னையரின்போராட்டத்தால் ஆடிப்போய் விட்ட இந்தியா, சூழ்ச்சியால் உண்ணாவிரதப் போராட்டத்தை நிறுத்த முயன்றனர்.

துப்பாக்கிகளின் வேட்டோசை பலனற்றுப் போனது - சுற்றி இருந்த அன்னையர் படையை அடித்து விரட்ட நினைத்தனர் - எவரும் அசையாத நிலை, தொடர்ந்த சூழ்ச்சிகள் - அடக்குமுறைகள் - மிரட்டல்கள் ஆகியவற்றால் உண்ணாவிரதப் போராட்டம் இடைநடுவில் நிறுத்தப்பட்டது.

அன்னையரின் போராட்டத்தை நிறுத்தியவுடன் - அவர்களின் கோரிக்கைகளும் அழிந்து விட்டதாக இந்தியா நினைத்தது.

மாமாங்கப் பிள்ளையார் கோயிலின் முன்றல், ஓய்ந்த விட்டது என இந்தியப் அரசு எண்ணியது ஆனால்,

அந்த ஆலய முன்றலில் திரும்பவும்மக்கள் திரண்டனர்

19 3.1988 அன்று -

இந்தியப் படையினரின் கொடுமையான அக்கிரமங்களை எதிர்த்து, அன்னை பூபதி கணபதிப்பிள்ளையின் அகிம்சை வடிவிலான போராட்டம் தொடங்கியது. மக்களை ஒரு புரட்சிக்குத் தயாராக்க அன்னை தன் உயிரைப் பணயம் வைத்தார்.

மட்டக்களப்பு-

கைக் கொடுத்த வாவியிலும் கடலிலும் மனித உடல்கள் வீசப்பட்டன. மனிதர்களின் இரத்தம் எங்கும் சிந்தப்பட்டது.

அன்னை பூபதி இங்கே தான் வாழ்ந்தார்.


அந்தத் தாய்க்கு விடுதலைப் பற்றுஉறுதியாக ஏற்பட்டத்தில் வியப்பில்லை அவர் தான் வாழ்ந்த மண்ணின் மாற்றங்களை தன் கண்ணாலேயே கண்டவர். எங்களதுநிலங்கள்பதிக்கப்பட்டதையும், காலத்திற்குக் காலம் - வன்முறையால் நாம் அடக்கப்படுவதையும் அவர் நன்கு அறிவார்.

அவரது இரு பிள்ளைகளை சிங்கள இராணுவம் சுட்டுக் கொன்றது. ஒரு மகனை சிறையில் அடைத்து மகிழ்ந்தது. கொடுமைகள் - சோகங்கள் - சோதனைகள் அன்னைக்குப் புதியனை அல்ல.

அந்தத் தாய் இந்தத் தேசத்தில் மரணிக்கும் ஒவ்வொரு போராளியையும் தனது பிள்ளைகளாகவே நினைத்தார். அதன் விளைவு தான் - தன் தேசத்தின் வாழ்வுக்காக உணவை மறுத்து ஒரு போராட்டத்தை நிகழ்த்தினார்.

யுத்த நிறுத்தத்தையும், ஆயுதத் தீர்வற்ற பேச்சு வார்த்தையையும் வேண்டி ஒரு உண்ணாவிரதப் போராட்டம் ஆக்கிரமிப்பாளரின் காதுகளில் இந்த வார்த்தைகள் விழவில்லை. ஆனல் இந்தப் போராட்டத்தை நிறுத்த அவன் எல்லா அடக்கு முறைகளையும் ஏவி விட்டான். அன்னையின் புனிதமான போராட்டத்தை மாசுபடுத்த நினைத்தான். ஆயுத பயங்கரவாதத்தின் மூலமும், சதிச் செயல்களின் மூலமும் மிரட்டி அழிக்க நினைத்தான்.

ஆனல் .. ...



அன்னையின் உண்ணாவிரதத்தை தடுத்து நிறுத்துவதற்காக மேடையை முற்றுகையிட்ட நிலையில் இந்திய இராணுவத்தினர்

''இந்திய அரசு நிபந்தனையற்ற யுத்த நிறுத்தத்தை மேற்கொள்ள வேண்டும்''

கடலும், வாவியும் சூழ்ந்த வளமான பிரதேசம். ஒரு காலத்தில் அந் நகருக்கு அம

அன்னையின் உறுதி தளராத மனோ பாவம், அவ

(11ம் பக்கம் பார்க்க


www.eelamview.com

'சிறீலங்கா' என்று முன்பு அழைக்கப்பட்ட இலங்கையின் கிழக்குக் கரையோரப் பிரதேசமான மட்டக்களப்பு, அக்காலத்தில் நாட்டின் பாற்பண்ணையாகத் திகழ்ந்தது. தேனும் பாலும் நிரம்பி இருந்த அந்தப் பழமை வாய்ந்த பிரதேசத்தில் அன்னைக் காலங்களிலிருந்து இரத்தமும் கண்ணீரும் ஊறும் நிலத்தபடியே உள்ளன.

ஆனால், ஏன் எல்லோரும் புலிகளின் புகழையே இப்போது பாடவேண்டும்?

அது வெற்றிவிழாவைப் புகழும் வெறும் சந்தர்ப்பவாதத்தின் ஓர் அம்சமல்ல. இந்திய இராணுவம் மக்கள் மீது புரிந்த கொடுமைகளும், ஈ. பி. ஆர். எல். எவ். ஈ என் டி எல் எவ் டெலோ, புளட் ஆகிய ஆயுதக்குழுக்க-

# கிழக்கில்



இலங்கைத் தீவில் நடந்து கொண்டிருக்கும் இனப்பூசலின் முக்கிய அங்கமாக கிழக்கு மாகாணமே விளங்குகின்றது. இலங்கைத் தீவின் ஆட்சி ஆங்கிலேயரிடமிருந்து சிங்களவரின் கைக்கு மாறமுன்னர், மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறத்தாழ 50% தமிழர்களும் 40% முஸ்லீம்களும், 04 % சிங்களவர்களும் இருந்தனர்.

இங்கே மேற்கொள்ளப்பட்ட சிங்களக் குடியேற்றங்களைத் தொடர்ந்து 1981ம் ஆண்டு இனவிகிதாசார நிலையானது 42% தமிழர்களும், 32% முஸ்லீம்களும், 25% சிங்களவரும் என மாற்றப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டம், அம்பாறை-மட்டக்களப்பென இரண்டாகப் பிரிக்கப்பட்டது. அம்பாறை மாவட்டம் எனப் பெயரிடப்பட்ட முன்னைய மட்டக்களப்பின் தென்பகுதி, நீர்ப்பாசனத் திட்டத்துடன் கூடிய சிங்களக் குடியேற்றங்களினால் சிங்கள ஆதிக்கமுள்ள பிரதேசமாக மாறியுள்ளது.

இந்திய இராணுவத்தின் வெளியேற்றத்தின் பின்னர், தற்பொழுது கிழக்கு மாகாணம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ளது. யுத்தமுனையில் வீரமரணமெய்திய புலிகளைப் பற்றிய சுவரொட்டிகள் பொது இடங்களை அலங்கரிக்கின்றன. ஆயுதம் ஏந்திய விடுதலைப் புலி வீரர்கள் எங்கும் காவலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். உணவுச்சாலைகள், தேநீர்க்கடைகள் எங்கும் புலிகளின் விடுதலைக் கீதங்கள் இசைக்கப்படுகின்றன. மட்டு நகர் வாவியிலுள்ள பாடும் மீன்கள் கூட பாட முடிந்தால் புலிகளின் புகழையே பாடும்.

மட்டக்களப்புக்கு விஜயம் செய்யும் பத்திரிகையாளர்களில் அநேகமானவர்களை வியக்க வைத்துள்ள மூன்று உண்மைகள் யாதெனில்

- எந்த நிலையிலும் யுத்தம் புரியும் புலிகளின் போராற்றல்
- புலிகள் அமைப்பின் ஒழுங்கும் கட்டுப்பாடும்
- புலிகளுக்கான மக்களின் ஆதரவு

னால் ஏற்படுத்தப்பட்ட அட்டூழியங்களும் மக்கள் மத்தியில் அத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

இந்திய அடிமைத்தளையின் கீழ், கிழக்கு மாகாண மக்கள் தங்கள் மௌனத்தைக் காட்டினார்கள்.

இவ்விதம் நெடுநாட்களாக அடக்கி வைக்கப்பட்டிருந்த மக்களின் உணர்வுகள், புலிகளின் வரவினால் கரைபுரண்டோடுகின்றன. ஈ பி ஆர். எல். எவ். ஆதரவுப் பத்திரிகையான ''இந்து'' Hindu)வின் ஆசிரியர் தோமஸ் ஆபிரகாம் கூட ''இந்தியா சார்பான மாகாணசபை ஆட்சி மட்டக்களப்பில் முழுமையாக நிராகரிக்கப்பட்டுள்ளது'' என எழுதி உள்ளார்.

ஒரு காலத்தில் காடுகளுக்குள் அனுப்பப்பட்ட புலிகள் மறக்கப்பட்டவர்களாகவே கருதப்பட்டார்கள்.

இந்தியாவினால் அதன் சார்பான குழுக்களுக்கு விநியோகிக்கப்பட்ட ஆயுதங்களின் தொகையும், பலவந்தமாகப் பிடிக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்ட இளைஞர்களின் அளவும், புலிகள் அவற்றை எதிர்த்துச் செயற்பட முடியாது என்ற கருத்தையே ஏற்படுத்தியிருந்தது. ஆனால் புலிகள் மக்களைப் பாதிக்காதவாறு அவ் ஆயுதங்களையும் பறித்து அந்த இளைஞர்களையும் கைது செய்தனர். பின்பு அவ் இளைஞர்களில் பெருந்தொகையினரை விடுதலை செய்தனர்.

இத்தகைய செயல்கள் புலிகளின் புகழுக்கு வழிகோலின. 'போராளிகள்' எனத் தங்களை அழைத்துக் கொண்ட இந்திய ஆதரவுக் குழுக்கள் கிழக்கில் அரசியல் விளையாட்டுக்களில் ஈடுபட்டு சுகபோக வாழ்வை அனுபவித்தார்கள். இவர்கள் படுவான்கரை, எழுவான்கரை போன்ற பகுதிகளில் முகாமிட்டிருந்தனர். ஏழாயிரத்துக்கும் அதிகமான அப்பாவி இளைஞர்களை பலவந்தமாகப் பிடித்து தமிழ்த் தேசிய இராணுவத்தை அமைத்தனர். அவர்களுக்கென பன்னிரண்டாயிரம் புதிய ஆயுதங்களும் வழங்கப்பட்டன.

ஆனால் விடுதலைப் புலிகள் தங்களைப் பலப்படுத்தி இந்தியத் துருப்புக்களை வெளியேற்றுவதற்காக புதிய இளைஞர்களைச் சேர்த்துப் பயிற்சியளித்தனர். 1989 கார்த்திகை மாதம் 5ம் திகதி அம்பாறை மாவட்டத்திலிருந்த திருக்கோயில் 'டெலோ' முகாமும், தம்பிலுவில் ஈ பி ஆர் எல் எவ். முகாமும் புலிகளால் தாக்கப்பட்டன. 27 தேசிய இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்பட்டனர்.

திருக்கோயிலிலிருந்து பொத்துவில்வரை ஒரு பாரிய எழுச்சி ஊர்வலம் நடாத்தப்பட்டது.

இதேவேளை, இந்திய இராணுவத்தின் தூண்டுதல்களின் பேரில், அவர்களின் ஆதரவுடன் தமிழ்த் தேசிய இராணுவம் சிறீலங்கா பொலிஸ் நிலையங்களைத் தாக்கி முஸ்லீம் பொலிஸ் உத்தியோகத்தர்களைக் கொன்றது

இதன் பின்னர் அம்பாறை மாவட்டத்தை விட்டு, தமிழ்த் தேசிய இராணுவம் மட்டக்-

# புலிகளின்

சில நாட்களின் பின் பன்னங்காடு, பொத்துவில், அக்கரைப்பற்று முதலிய இடங்களில் மோதல்கள் ஏற்பட்டன.

காரைதீவு, கல்முனை தவிர்ந்த ஏனைய எல்லா முகாம்களையும் தமிழ்த் தேசிய இராணுவம் மூடிக் கொண்டது.

தமிழ்த் தேசிய இராணுவத்தினரில், பிரிகேடியர் காலித் என தன்னைத் தானே கூறிக்கொண்டு கல்முனை வாடி வீட்டிலிருந்து ஒருவன் இயங்கினான். உண்மையில் இந்திய உளவுத்தாபனமான ''றோ'' (R A.W வைச் சேர்ந்த ''டேவிட்'' என்பவனே, பிரிகேடியர் காலித் என தன்னைத் தானே கூறிக் கொண்டு செயற்பட்டான்.

இதே சமயம் கார்த்திகை 27ந் திகதி மாவீரர் நாள் கொண்டாட்டத்தில அக்கரைப்பற்று அட்டாளைச்சேனை, தம்பிலுவில், பொத்துவில், திருக்கோவில் போன்ற இடங்களில் புலிகள் பொதுக் கூட்டங்களை ஒழுங்கு செய்தனர். இக்கூட்டங்களில் புலிகளின் முக்கியஸ்தர்களான கலாநிதி அரன் பாலசிங்கம், திரு. யோகி ஆகியோர் கலந்து கொண்டனர்.

களப்புக்குச் சென்றது. அங்கிருந்த பல ஈ பி ஆர் எல். எவ். பேர்வழிகள், பொது மக்களின் வாகனங்களைக் கடத்தி அவற்றில் திருகோணமலைக்குத் தப்பி ஓடினர்.

விடுதலைப் புலிகள் தவிர்ந்த ஏனைய இயக்கத்தினர் கடந்த காலங்களில் ஒரு குழப்பமான மனோ நிலையால் பீடிக்கப்பட்டிருந்தார்கள் இவர்களது இராணுவ நடவடிக்கைகளில் கூட இம் மனப்பான்மை குறுக்கிட்டது.

தலைவர்களாக இருந்தவர்களின் சொந்த இடங்களில் மட்டுமே அவர்கள் முகாம்களை ஏற்படுத்தினர் இப்போக்கானது, கேலிக்குரியதுடன், பத்திசாதுரிய மற்றதுமாகும்.

மட்டக்களப்பில் கொக்கட்டிச் சோலையிலும், உன்னிச்சையிலும் இருந்த தமிழ்த் தேசிய இராணுவ முகாம்கள் மட்டுமே குறிப்பிடத் தக்க அளவுக்குப் பலம் பொருந்தியிருந்தன. அத்துடன் பழுகாமம், புன்னைச்சோலை ஆகிய முகாம்களும் பலத்துடன் இருந்தன

(20)

பட்ட ஒரு கிராமமாகும், அயலிலுள்ள வெல்லா வெளியையும், பழுகாமத்தின் மேற்கிலுள்ள தந்திரி மலைக்காட்டையும் புலிகள் தம் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். இந்த இடங்களை நோக்கிச் சென்ற அனேகமான வீதிகளும் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தன.

ஆனாலும், கொக்கட்டிச் சோலையில் புலிகள் சில இழப்புகளைச் சந்தித்தார்கள். பழுகாமத்தைப் பொறுத்தவரை 35ம் குடியேற்றத்திலிருந்து. நெல்வயல்களினூடாக புலிகள் தாக்குதலை நடாத்தினார்கள்.

புலிகளின் அடுத்த இலக்கு புன்னைச் சோலையாகும். இந்த இடத்திலேதான் மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதான தமிழ்த் தேசிய இராணுவமுகாம் இருந்தது புன்னைச் சோலை பழுகாமத்தைவிட குறைந்த மக்கள் தொகையைக் கொண்டது

முதலில் புலிகள், கிரானிலிருந்து பல்கலைக்கழகப் பக்கமிருந்த வந்தாறு மூலைக்குள் பிரவேசித்தார்கள், அங்கிருந்து செங்கலடிச் சந்தியை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர். அத்துடன் வந்தாறு மூலைப் பல்கலைக் கழகத்திற்கு அருகில் புலிகள் தங்களது முகாமொன்றை அமைத்தார்கள்.

புன்னைச் சோலை மீது ஒரு மும்முனைத் தாக்குதலைப் புலிகள் தொடுத்தனர் ஏறாவூரிலிருந்து தரைமார்க்கமாகவும் கரையோரப் பாதையூடாக பிரதான இலக்கை நோக்கி சமாந்தரமாகவும். கடலுக்குக் குறுக்காகவும் முன்னேறினர்.

புன்னைச்சோலையை அடுத்திருந்த சத்துருக்கொண்டான், தன்னாமுனை ஆகிய இடங்களிலும் சிறு சண்டைகள் நிகழ்ந்தன, உன்னிச்சைப் பகுதியிலிருந்து புன்னைச் சோலைக்கு உதவி புரிய வந்த தமிழ் தேசிய இராணுவத்தினரையும் மட்டக்களப்பு-

# பாய்ச்சல்



புலிகளை மக்கள் வரவேற்கிறார்கள்

புளட் குழுவை இந்தியாவில் பயிற்றுவித்த ''சங்கர் மாஸ்டர்'' எனப்படுகின்ற இந்திய உளவுத்தாபனமான ''றோ'' வின் அதிகாரி அதவன் என்பவரே, தமிழ் தேசிய இராணுவத்தின் பின்னணியிலிருந்த முக்கியமான நபராகும் மார்கழி மாதம் 8ம் திகதிசரியாக அம்பாறை மாவட்டத்தில் தேசிய இராணுவ முகாம்கள் மீதான புலிகளின தாக்குதல் நடந்து ஒரு மாதத்தின் பின், மட்டக்களப்பு மாவட்டத்திலும் புலிகள் தாக்குதல்களைத் தொடங்கினார்கள்.

பழுகாமம் முக்கிய இலக்காகியது. அது குடாவினாலும் நெல்வயல்களாலும் சூழப்

செங்கலடி வீதியிலுள்ள குடாவெளி எனும் இடத்தில தடுத்து நிறுத்திய புலிகள் தேசிய இராணுவத்தினரை முறியடித்தனர்

புன்னைச்சோலை புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் வந்தது. இந்நிலையில் தங்களது தாக்குதல் தந்திரோபாயத்தை மாற்றிய விடுதலைப் புலிகள், யாரும் எதிர்பார்த்திருக்காத பக்கமாகிய ஊறணியிலிருந்து மட்டக்களப்பு நகர மீது தாக்குதலைத் தொடுத்தார்கள்.

மட்டக்களப்பு நகரம் கடல் நீரினால் சூழப்பட்ட நிலையில் இருவழி தரைப் பாதைகளை மட்டும் கொண்டிருக்கிறது. ஒன்று தெற்கில் கல்

(11-ம் பக்கம் பார்க்க)

www.eelamview.com

# பிரபாகரனின்……

(1ம் பக்கத்தொடர்ச்சி)

தமிழீழத்தில் அமைதியும். சகஜ நிலையும் தோன்றியிருக்கிறது. இன ஒடுக்குமுறையாலும், இராணுவ அடக்குமுறையாலும் தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைக்கு தீர்வு காணமுடியாது என்பதனை இன்றைய சிறிலங்கா அரசு உணர்ந்திருப்பதுபோலத் தெரிகிறது ஜனாதிபதி பிரேமதாஸாவின் துணிச்சலான, புதிய அணுகுமுறை காரணமாகவே இன்று இந்த நல்ல சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது இந்த அமைதிநிலை நீடித்து, எமது மக்கள் சுதந்திரமாக, கௌரவமாக, பாதுகாப்பாக வாழவேண்டும் என்பதே எமது விருப்பம். இது சிங்கள அரசியற் தலைவர்களதும், சிங்கள மக்களதும் பார்வையையும் அணுகுமுறையையும் பொறுத்திருக்கிறது. வரலாற்று ரீதியாக எமது மக்களுக்கு இழைக்கப்பட்ட பாரிய அநீதிகளையும், தவறுகளையும் சிங்கள மக்கள் நன்குணர்ந்து. மனித நீதியின் அடிப்படையில், மனித தர்மத்தின் அடிப்படையில் எமது பிரச்சனைக்குத் தீர்வுகாண முயற்சிக்க வேண்டும். எமது மக்களுக்கு நீதி வழங்க மறுத்து, மீண்டும் எம்மீது அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்படுமானால், நாம் எமது மக்களின் சுதந்திரத்தையும் பாதுகாப்பையும் நிலைநாட்ட ஆயுதம் ஏந்திப் போராடுவதற்கு சிறிதேனும் தயங்கமாட்டோம்.

நாம், நீண்டகாலமாக, ஆயுதப்போர் வடிவத்தில் எமது போராட்டத்தை முன்னெடுத்து வந்திருக்கிறோம். ஆயினும், வரலாற்று சூழ்நிலைக்கும், காலத்தின் கட்டாயத்திற்கும் ஏற்ப, எமது போராட்ட வடிவங்களில் மாறுதல்கள் ஏற்பட்டும் வந்தன. எமது இலட்சியப் பாதையில் இப்படியான வடிவமாற்றங்கள் எழுவது சகஜம். இன்று எமது கட்சியமைப்பைக் கட்டி எழுப்பி. சனநாயக அரசியல் வடிவத்தைத் தழுவிக்கொள்ள நாம் தீர்மானித்திருக்கிறோம். எமது விடுதலை இயக்கத்தை மக்கள் இயக்கமாக விரிவுபடுத்தி, புலிகளே, தமிழீழ மக்களின் உண்மையான பிரதிநிதிகள் என்பதை நாம் உலகிற்கு எடுத்துக்காட்டுவோம்.

சனநாயக அரசியல் மரபுக்கு நாம் விரோதமானவர்கள் அல்லர். எமது மக்களின் அடிப்படையான, சனநாயக அரசியல் உரிமைகளுக்காகவே நாம் போராடிவருகிறோம். சமூக நீதியும், சனநாயக சுதந்திரங்களும் தழைத்தோங்கும் ஓர் உன்னத சமுதாயத்தைக் கட்டி எழுப்புவதே எமது அரசியல் இலட்சியமாகும். இந்த இலட்சியத்திற்கு இடையூறாகவுள்ள ஒடுக்குமுறை வடிவங்களை முற்றாகக் களைந்தெறிய சிறீலங்கா அரசு முன்வர வேண்டும். அப்பொழுதுதான், அரசியல் நீரோட்டத்தில் உண்மையான சனநாயக தர்மம் மலர முடியும்.

எமது மக்களின் அரசியல் அபிலாசைகளை பூர்த்திசெய்யும் வகையில் ஓர் உருப்படியான, நிரந்தரமான அரசியல் தீர்வை முன்வைக்காமல், ஆயுதங்களை ஒப்படைக்குமாறு இந்திய அரசு எம்மை நிர்ப்பந்தித்தது. இதனால் ஒரு பெரிய யுத்தமே வெடித்தது முழு அளவிலான இராணுவ பலத்தைப் பிரயோகித்து ஆயுதங்களைக் களைந்துவிடும் நோக்கில் இந்திய வல்லரசானது பெரிய தோல்வியைத்தான் சந்தித்தது. நீண்டகாலமாக ஒடுக்கப்பட்டு, இன அழிவை எதிர்கொண்டுவந்த எமது மக்களின் உரிமைகள்பற்றியோ, நலன்கள் பற்றியோ, பாதுகாப்புப்பற்றியோ எந்தவித அக்கறையும் காட்டாமல், எமது மக்களின் பாதுகாப்பு அரணாக விளங்கிய ஆயுதங்களைப் பறித்தெடுக்கவேண்டும் என்பதில் மட்டும் இந்திய அரசு கண்ணுங் கருத்துமாக இருந்தது. இந்திய அரசு இழைத்த இமாலயத் தவறு இது. இந்தத் தவறிற்கான கசப்பான வரலாற்று அனுபவத்தை இந்திய அரசு பெற்றுவிட்டது. இந்தியா இழைத்த இந்தப் பெரும் தவறை சிறீலங்கா அரசும் செய்யமாட்டாது என்றே நாம் நம்புகிறோம்.

சிறீலங்கா ஆயுதப் படைகளுக்கும் விடுதலைப் புலி வீரர்களுக்கும் மததியில் இப்பொழுது போர் நிறுத்தம் நிலவுகிறது. எனினும், எமது மக்களின் அடிப்படைப் பிரச்னைகளுக்கு இன்னும் தீர்வு ஏற்படவில்லை. எமது மக்களின் பொருளாதாரவாழ்வு சீர்குலைந்த நிலையில் இருக்கிறது. யுத்த அழிவுகளால் எமது கிராமங்களும் பட்டினங்களும் சுடுகாடுபோலக் காட்சியளிக்கின்றன. எமது மக்களுக்கு எதிராக ஏவப்பட்ட ஒடுக்குமுறை வடிவங்கள் முற்றாக இன்னும் நீங்கியபாடில்லை. அரச பயங்கரவாதத்தால் ஏற்பட்ட வடுக்கள் முற்றாக இன்னும் மாறிவிடவில்லை. எமது மக்கள் தமது பாதுகாப்புக் குறித்து இன்னும் அஞ்சிய நிலையில் வாழ்ந்து வருகிறார்கள். இந்தச் சூழ்நிலையில், விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கையளிக்கவேண்டுமென சிங்கள இனவாதப் பத்திரிகைகள் குரலெழுப்பி வருவதைக்காண வேதனையாக இருக்கிறது. ஆயுதங்களைக் கையளிக்கவேண்டும் என்ற கோரிக்கையை எழுப்பாமல். எதற்காக எமது விடுதலை இயக்கம் ஆயுதங்களை ஏந்தியது, எதற்காக நாம் பதினைந்து ஆண்டு காலத்திற்கு மேலாக ஆயுதப் போராட்டத்தை நடத்தினோம். இதற்கான காரணிகள் என்ன என்பதை சிங்கள மக்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆயுதப்போராட்டம் தோன்றி வளர்ந்த எதார்த்தப் புறநிலைகளை ஆராய்ந்து பார்த்து, அதன் காரணிகளை நீக்கிவிட உருப்படியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால் ஆயுதப் பிரச்னை தானாகத் தீர்ந்துவிடும். அதனை விடுத்து, ஆயுதங்களைப் போட்டதும் இனப்பிரச்னை தீர்ந்துவிடும் எனக் கருதுவது மிகவும் தவறான கண்ணோட்டமாகும். பூதாகாரமாக வளர்ந்துவிட்ட இனப்பிரச்னையும், அதனால் எழுந்த சுதந்திர வேட்கையின் புரட்சிகர வெளிப்பாடாகவே ஆயுதப்போர்வடிவம் தோற்றம் கண்டது. ஆகவே இனப்பிரச்னை சுமுகமாகத் தீர்க்கப்படாதவரை ஆயுதப் பிரச்னை தீரப்போவதில்லை. இதனை சிறீலங்கா ஆட்சியாளரும், சிங்களமக்களும் தெளிவாகப் புரிந்துகொள்வார்கள் என நம்புகிறேன்.

எமது மக்களுக்கு ஒரு சுபிட்சமான எதிர்காலத்தையும், நிரந்தமான அமைதியையும், சுதந்திரமான வாழ்வையும் பெற்றுக்கொடுக்க எமது விடுதலை இயக்கம் தொடர்ந்து போராடும். இன்று எமது மக்களின் நம்பிக்கையின் நட்சத்திரமாகத் திகழ்வது எமது இயக்கம்தான். எமது இயக்கத்தை ஒரு பலம்பொருந்திய தேசிய சக்தியாக கட்டி எழுப்புவதற்கு தமிழ், முஸ்லீம் மக்கள் எமது இயக்கத்தின் பின்னால் அணிதிரளவேண்டு மன கேட்டுக்கொள்கிறேன்.

---

# எம்மீது சுமத்தப்பட்ட….

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திய ஆக்கிரமிப்பு எமது மண்ணில் தோல்வி கண்டது.

தென் ஆசியப் பிராந்தியத்தில் இருக்கும் சிறிய நாடுகள் மீது தனது வல்லாதிக்கத்தை, இராணுவபலம் மூலம் செலுத்தி வந்த இந்தியாவிற்கு புலிகள் - இந்தியப்போர் ஒரு பாடமாக அமைந்தது.

சுதந்திர உணர்வு கொண்ட மக்களின் விடுதலை வேட்கையை எந்த வல்லரசாலும் அடக்க முடியாது என்பதைத்தான், தமிழீழ விடுதலைப் போராட்டம் நிருபித்துள்ளது.

இந்தியா தமிழீழமக்களின் போராட்டத்தில் உள்ள நியாயங்களை அங்கீகரிக்க மறுத்து, தமிழீழப் போராட்டத்தை அழிப்பதிலேயே அக்கறை இருந்தது.

தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை இந்திய வல்லாதிக்கப் பூதத்திடமிருந்து காப்பாற்ற வேண்டிய வரலாற்றுக் கடமை எம்மீது சுமத்தப்பட்டிருந்தது.

எமது போராளிகளினதும் மக்களினதும் அளப்பெரிய தியாகங்களால் நாம் எமது கடமையை செய்து முடித்துள்ளோம்.

எமது போராட்டம் அடக்கப்படும் - ஒடுக்கப்படும் பல தேசிய இனங்களுக்கு நம்பிக்கையையும் புத்துணர்ச்சியையும் ஏற்படுத்தியதோடு வழி [illegible]ளது.

www.eelamview.com

---

புலிகள்-அரசு …

(7-ம் பக்க தொடர்ச்சி)

எதிர்பார்த்தது. ஆனால் யாருமே எதிர்பாராத வகையில் நாங்கள் மிகக் குறுகிய காலத்திலேயே தமிழ்த்தேசிய இராணுவத்தை முறியடித்தோம் பலரை சரணடையவைத்தோம்.

'விடுதலைப் புலிகளுக்கு கிழக்கிலே ஆதரவில்லை; வடக்கில் மட்டும்தான் ஆதரவு உண்டு' என எமது மக்களைப் பிரதேச ரீதியாகப் பிரிக்கும் வகையில் செயற்பட்டு வந்த இந்தியஅரசு, கிழக்கிலே தமிழ் தேசிய இராணுவத்தை வலுவாக நிறுத்தியதன் மூலம்- கிழக்கிலே எம்மைப் பலவீனமடையச் செய்வதன் மூலம்- கிழக்கில் இருந்து எம்மை அகற்றுவதன் மூலம்- வடக்கையும், கிழக்கையும் பிரித்தாளலாம், கிழக்கிலே எமக்கு ஆதரவு இல்லை என்பதைக் காட்டலாம் என இந்திய அரசு திட்டம் தீட்டியது.

ஆனால், நேர்த்து மாறாக எந்தப் பகுதியில் தமிழ்த் தேசிய இராணுவம் பலமாக நிற்கும் என எதிர்பார்த்தார்களோ; அந்தப் பகுதியிலேயே இவர்கள் மிக விரைவாக (ஒரு சில நாட்களில்) நிராயுதபாணிகள் ஆக்கப்பட்டார்கள் அங்கிருந்து கலைக்கப்பட்டார்கள்.

இது இந்தியாவுக்குப் பெரிய அதிர்ச்சியைத் தந்தது!

நாங்கள் இலங்கை அரசுடன் பேசமாட்டோம் என இந்தியா கணிப்பிட்டது!

ஆனால், நாம் பேசியதன் மூலம் இந்திய இராஜதந்திரத்திற்குப் பெரியதொரு அடி கொடுத்தோம்.

இந்தியா, தமிழ்த் தேசிய இராணுவத்தை உருவாக்குவதன் மூலம் மாகாண சபையைக் காப்பாற்றலாம் என நினைத்தது!

தாங்கள் பிழையான மக்கள் ஆதரவு அற்ற சமூக விரோதக் கும்பலை ஆதரித்து நிறை பலனை இந்தியா அனுபவித்தது.

இப்பேச்சுவார்த்தையின் போது இலங்கை அரசுடன் பின்வரும் இணக்கங்கள் காணப்பட்டன.

I. இந்த மாகாணசபை கலைக்கப்படவேண்டும்

II. இந்த மாகாண சபை ஜனநாயக முறையில தேர்ந்தெடுக்கப் படவில்லை.

III. மாகாண சபை கலைக்கப்பட்டால், அதை ஒரு இடைக்காலத்தீர்வாக ஏற்று விடுதலைப் புலிகள் தேர்தலில் பங்கு பற்றுவார்கள். ஆனால் அது நிரந்தரத் தீர்வாகாது

IV இந்தத் தேர்தலின் பின்பு தமிழ் - முஸ்லீம் மக்களைக் கலந்து பேசி நாங்கள் ஒரு நிரந்தரத் தீர்வுக்கான திட்டத்தை முன்வைப்போம்.

V. மாகாண பொலிஸ் படை உருவாக்கப்பட வேண்டும். அதில் தமிழ் - முஸ்லீம் மக்கள் சேர்த்துக் கொள்ளப் படவேண்டும்.

VI இராணுவம், சட்டம் ஒழுங்கைக் காக்க வேண்டிய தேவை இல்லை.

VII தமிழ்ப் பிரதேசத்துள்ள இராணுவ முகாம்கள் குறைக்கப்படவேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திலும் முக்கியமாக [illegible] ஒரு சில இடங்களைத் தவிர அரச கட்டிடங்கள், கோவில்கள், பாடசாலைகள் அமைந்த இடங்களில் இருக்கும் இராணுவ முகாம்களை அகற்ற வேண்டும்.

* குடியேற்றங்களைப் பொறுத்தவரை ஒரு ஆய்வுக் குழுவை நியமித்து அதன் மூலம் குடியேற்றங்களால் ஏற்பட்ட தாக்கங்களை ஆராய்வேண்டும் அது குறித்து ஆழமாகப் பேசி முடிவு காணவேண்டும்

# தமிழீழ விடுதலைப் புலிகளின்

# மகளிர் படைப் பிரிவு



உலகிலுள்ள அனைத்து தேச விடுதலை இயக்கங்களைப் போன்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் ஒரு பெண்கள் படைப்பிரிவைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இப் படைப்பிரிவானது தன்னை அரசியல் - இராணுவப் பணிகளில் ஈடுபடுத்தி மிகப்பெரிய சாதனைகளைப் புரிந்தது டன், தமிழீழப் பெண்களிடையே விழிப்புணர்வையும் தூண்டிவிட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப்போராட்டம் பதினேழு வருட வரலாற்றைக் கொண்டது. இதில் விடுதலைப் புலிகளின் மகளிர் படைப்பிரிவு ஆறுவருட சரித்திரத்தைக் கொண்டது!

எமது சமூக அமைப்பிலுள்ள பெண்களுக்கு எதிரான அடக்குமுறை வடிவங்களும், பால் ரீதியிலான பாரபட்சங்களும், இவற்றால் எழுந்த சமூக உணர்வுகளுமே எமது விடுதலைப் போராட்டத்தில் பெண்கள் காலம் தாழ்த்தி இணைந்து கொண்டதன் காரணங்களாகும்.

இலங்கைத் தீவில் தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனரீதியான அடக்குமுறைகளும், அதன் பகிரங்க வெளிப்பாடுகளான தமிழ் இனப்படுகொலைகளும், பொருளாதார – கல்வி சீரழிப்புகளும் தமிழர்களின் தேசிய உணர்வைத் தட்டி எழுப்பின. சிங்களப் பேரினவாதத்துக்கு எதிராக முழுத் தமிழ்த் தேசிய இனமும் கிளர்ந்தெழுந்தது.

இப் புரட்சிகர எழுச்சியின் ஓரங்கமாக தமிழ்ப் பெண்களும் விடுதலைப் போராட்டத்தில் இணைந்து கொண்டனர். ஆரம்பத்தில் அரசியல் பிரசார வேலைகளிலும் பின்னர் ஆயுதப் போராட்டத்திலும் நேரடியாகவே ஈடுபட்டார்கள்.

1983-ம் ஆண்டு ஐப்பசித் திங்களில் விடுதலைப் புலிகளின் பெண்கள்பிரிவு உருவாக்கப்பட்டது. இக்காலகட்டத்தில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பெண்களினுடைய பங்களிப்பின் அவசியத்தை வலியுறுத்தி எமது இயக்கத்தினால் "பெண்களும் புரட்சியும்" என்றதொரு சிறிய நூல் தமிழிலும், ஆங்கிலத்திலும் வெளியிடப்பட்டது.

1984 ம் ஆண்டு நடுப் பகுதியில் இராணுவப்பயிற்சியைப் பெற்றுக்கொண்ட அவர்கள் நன்றாக ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு மகளிர் கரந்தடிப்படைப்பிரிவாக உருவாக்கம் கண்டார்கள்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முதல் தடவையாக பெண்களும் ஆயுதம் தரித்து போராட்டகளத்தில் குதித்தார்கள். தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஆயுதம் தரித்த பெண்களின் பங்களிப்பானது எமது சுதந்திரப் போராட்டத்தை ஒரு புதிய சகாப்தத்திற்கூடாக அழைத்துச் செல்ல வழிவகுத்தது.

ஆயுதம் தாங்கிய மகளிர் படைப்பிரிவானது, தமிழீழப் பெண்கள் மத்தியில் அரசியல் ரீதியான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் பணிகளிலும், அவர்களை ஓர் அணியின் கீழ் ஒன்று திரட்டும் வேலைகளிலும் ஈடுபட்டதுடன்.

* பெண்களுக்கு எதிராகச் சமூகம் காட்டும் பாரபட்சங்களுக்கு எதிராகவும்,
* தமிழ்பேசும் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட இனரீதியான அடக்குமுறைகளுக்கு எதிராகவும்;
* அடிமைத் தனத்திலிருந்து பெண்கள் மீள வேண்டிய தேவைகளை வலியுறுத்தியும் பிரச்சாரங்களை மேற்கொண்டது.

இத்திட்டங்களை வெற்றிகரமாகச் செயற்படுத்துவதற்காக 1984-ம் ஆண்டு மார்கழி மாதத்தில் "சுதந்திரப் பறவைகள்" என்ற பெயரில் சஞ்சிகை ஒன்று வெளியிடப்பட்டது. இச்சஞ்சிகை தொடர்ந்தும் வெளிவருகின்றது.

1985 ம் ஆண்டின் பிற்பகுதியில் யாழ். குடாநாடு விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தில் இருந்தபொழுது, மகளிர் பிரிவானது, தனது அரசியல் அமைப்பு வேலைகளை யாழ். குடாநாடெங்கும் விரிவுபடுத்தியது. பெண்கள் அமைப்புகளுடனும், தொழிற்சங்கங்கள், கைத்தொழிற் பயிற்சி நிலையங்கள், சுகாதார நலன்புரிச் சங்கங்கள், கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றுடனும் இணைந்து செயற்பட்டு எமது சுதந்திரப் போராட்டத்திற்காகப் பெண்களை அணிதிரட்டப் பிரசாரம் செய்தது.

அதே சமயம் வன்னி மன்னார் பிராந்தியங்களில் ஸ்ரீலங்கா இராணுவத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களிலும் மகளிர் படைப்பிரிவு ஈடுபட்டிருந்தது.

பெண்கள் படைஅணி பங்கு கொண்ட முதலாவது பெரிய போர்க்களமாக, 1986-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 12-ம் 13-ம் திகதிகளில் மன்னார் - அடம்பனில் நடந்த தாக்குதல்களைக் குறிப்பிடலாம். லெப்ரினன்ட் கேணல் விக்டரின் தலைமையில் நடத்தப்பட்ட இத்தாக்குதலில் 26 ஸ்ரீலங்காப் படையினர் கொல்லப்பட்டனர்; இருவர் கைது செய்யப்பட்டனர். இப் போரிலேயே மன்னார் பிராந்தியத் தளபதி லெப். கேணல் விக்ரர் வீரமரணமடைந்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் மீதான எமதுகட்டுப்பாட்டை நிலைநிறுத்தவும், யாழ். கோட்டை இராணுவ முகாமைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கவும் நடைபெற்ற யுத்தங்களிலும் பெண்கள் அணியானது முக்கியபங்கு கொண்டிருந்தது.

1987 இன் ஆரம்ப காலப் பகுதியில் மையிலத்தை (வல்வெட்டித்துறை), காபர் வியூ ஹோட்டல (காங்கேசன் துறை), குரும்பசிட்டி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டிருந்த ஸ்ரீலங்கா இராணுவ முகாம்கள் மீதான தாக்குதல்;

1987-ம் ஆண்டு ஆனிமாதம் 8-ம் திகதி யாழ். தொலைத் தொடர்பு நிலைய இராணுவ முகாம் மீது நடாத்தப்பட்ட தாக்குதல்;

அதே ஆண்டு ஆடிமாதம் 5-ம் திகதி நெல்லியடி இராணுவ முகாம் மீது கரும்புலி மில்லரின் தாக்குதல் ஆகியவற்றில் மகளிர்படை அணி கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

சுத்துடன இவர்கள் எமது இயக்கத்தால் ஏற்படுத்தப்பட்டிருந்த வீதிச் சோதனை நிலையங்களிலும், ஸ்ரீலங்கா இராணுவ முகாம்களைச்சுற்றி நம் அமைத்திருந்த பாதுகாப்பு அரண்களிலும் பணிபுரிந்து, நாள்தோறும் நடைபெற்றசண்டைகளுக்கும், ஷெல், விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல்களுக்கும் பிரமிக்கத்தக்க துணிச்சலுடன் முகம் கொடுத்தார்கள்.

இவ்விதம் நேரடியான ஆயுதப் போராட்ட நடவடிக்கைகளில் எமது பெண் போராளிகள் ஈடுபட்டதன்மூலம் தமது திறமையையும், துணிச்சலையும் அர்ப்பண உணர்வையும், ஆளுமையையும் வளர்த்துக் கொண்டார்கள்.

அவர்கள் செய்த உன்னதமான உயிர்த்தியாகங்களினால் உறங்கிக் கிடந்த பெண் இனம் விழிப்படைந்து எழுச்சி பெற்றது. தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் பெண்களின் பங்களிப்பு இன்றியமையாததாகி விட்டது.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தானது குறித்தும் இந்திய இராணுவத்தின் வருகைக்குப் பின்னாலிருந்த தீய நோக்கங்கள் குறித்தும் எமது மக்களுக்குப் புரியவைப்பதற்கு, இயக்கம் பாரிய அளவில் பிரசாரங்களை நடாத்தியது.

அமைதி வழி எதிர்ப்பு வடிவங்களான கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், ஒத்துழையாமை போன்றவற்றில் பெருமளவில் பெண்கள் கலந்து கொண்டது கண்கூடு.

இந்திய மேலாதிக்கவாத நோக்கத்திற்கெதிரான தமிழ் இனத்தின் எதிர்ப்பை, திலீபனின் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம் உச்ச நிலைக்குக்கொண்டு சென்றது!

திலீபனின் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஆதரவாக பெண் போராளிகள் மாபெரும் ஊர்வலங்களை நடாத்தினார்கள்.

இந்திய - தமிழீழப் போர் தொடங்கிய போது மகளிர் படைப்பிரிவினர் ஆண் போராளிகளுடன் தோளோடு தோள் நின்று, இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கெதிரான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த போரில் ஈடுபட்டனர்.

இந்திய இராணுவத்துக்கு எதிரான யாழ்ப்பாண யுத்தத்தில் மகளிர் அணியானது உக்கிரத்துடனும், மெச்சத்தக்க மனோவலிமையுடனும் போரிட்டது. சில இடங்களில் முன்னேறிக் கொண்டிருந்த இந்திய இராணுவ அணிகளின் வேகத்தை மகளிர் அணி திரத்தைக் காட்டியும், போர் உபாயங்களைக் கையாண்டும் தாமதப்படுத்தியது!

சித்தங்கேணியில் பெண் போராளிகளும் பங்குகொண்ட ஒரு சண்டையில் இந்திய இராணுவத்தின் "டாங்கி" ஒன்று கண்ணி வெடி மூலம் தகர்க்கப்பட்டது. பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இந்தச் சண்டையில் இந்திய இராணுவப் படைப்பிரிவு ஒன்றை மகளிர் அணியினர் தனித்து நின்று தாக்கித் தமது போர் ஆற்றலை வெளிப்படுத்தினர்.

இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்ற இந்திய-புலிகள் போரில் பெண் போராளிகளின் பங்களிப்பும் போர் நடவடிக்கைகளில் அவர்களது செயற்பாடுகளும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக இருந்தது!

வன்னிக்காடு-களில் இந்தியப் படைகளுடன் நடந்த பல சண்டைகளில் பெண்கள் படைப் பிரிவானது தனது தனித்துவத்தைப் பதித்திருந்தது!

இந்திய இராணுவத்துக்கு எதிரான போர் நடவடிக்கைகளில் மாத்திரமல்லாது, போர் நடவடிக்கைக்கு உதவியாக உணவு விநியோகத்திலும், மருத்துவ வேலைகளிலும், ஆயுதங்கள், வெடி மருந்துகள் இடம்மாற்றுவதிலும் இருந்த சிரமங்களின் மத்தியிலும் மகளிர் அணி பிரமிக்கத்தக்க அளவில் செயற்பட்டது!

இந்த நிலையில் பெண்களின்

(9ம் பக்கம்பார்க்க)



www.eelamview.com

வடமராட்சியில் (OEERATION LIBERATION) விடுதலைத் தாக்குதல், நடாத்தப்பட்டது. இந்தியாவுக்கு, யாழ். குடாநாட்டில் சிறீலங்கா அரசு பெரும் தாக்குதலை நடாத்தத் திட்டமிட்டிருந்தது தெரியும், இந்திய அரசுக்கு நாம் இதுபற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.

ஆனால் இந்திய அரசோ தாம் விரும்பியபடி, நாம் கீழ்ப்படிந்து செயலாற்ற வேண்டுமென விரும்பியது. நாம் சுதந்திரமாகச் செயற்பட்டது. இந்தியாவுக்குப் பிடிக்கவில்லை எனவே, இத் தாக்குதலை இந்தியா மறைமுகமாக ஆதரித்தது.

வடமராட்சியை எமது கட்டுப்பாட்டிலிருந்து நாம் இழந்தது, இந்திய அரசுக்கு மகிழ்ச்சியைத் தந்தது. புலிகளால் மக்களைக் காப்பாற்ற முடியவில்லை என மறைமுகமாகப் பிரசாரமும் செய்தது.

எமது மக்களையும் எம்மையும் பிரிக்கவும் எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை அழிக்கவும் இது தான் சரியான சந்தர்ப்பம் என இந்தியா நினைத்தது.

**இந்தியாவின் நயவஞ்சகத்தனம்**

இந்தியா ஆகாய மார்க்கமாக வந்து விமானங்களிலிருந்து சில உணவுப் பொட்டலங்களைப் போட்டது. மக்கள் இந்தியாவைப் புகழ்ந்தார்கள்; இந்திய உதவிக்கு நன்றி தெரிவித்துப் பாராட்டினார்கள்.

உணவு போடப்பட்டது. தமிழ் பேசும் மக்களிடம் உள்ள அக்கறையினால் அல்ல என்பதையும், அதன் பின்னணியையும் பெரும்பாலானவர்கள் புரிந்துகொள்ளவில்லை.

தமிழ் பேசும் மக்களிடமும், தமிழ் மக்களைக் காக்கச் செல்றோம் என்று சர்வதேச உலகிலும், இந்தியா நல்ல பெயரைப் பெற்றுக்கொண்டது.

அதே சமயம் தனது வல்லாண்மையைக்காட்டி சிறீலங்கா அரசைப் பயமுறுத்தியது.

'யாழ். குடா நாட்டைக் கைப்பற்றலாம், ஆனால், அங்கு தொடர்ந்து நிலைகொள்வது சாத்தியமில்லை, என சிறீலங்கா இராணுவ உயர் அதிகாரிகள், அப்போதைய ஜனாதிபதி ஜெயவர்த்தனாவிடம் கூறினார்கள்.

தமிழீழத்தில் நடந்த தேசிய விடுதலைப் போராட்டம், தனது நாட்டின், தேசிய ஒருமைப்பாட்டுக்குக் குந்தகம் விளைவிக்கும் என இந்தியா எண்ணியது. இந்தியாவில் பல தேசிய இனங்கள் அடக்கப்பட்டு இருக்கின்றன. எமது விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சி அங்கும் பல போராட்டங்களைத் தூண்டும் என இந்தியா பயந்தது. அத்துடன்,

தனது நலன்களுக்கு எதிரான சக்திகளுடன் கூட்டுச் சேர்ந்திருக்கும் சிறீலங்காவை, தனது வல்லாதிக்க வலைக்குள் வீழ்த்தவேண்டும் என்று நினைத்திருந்த இந்திய அரசு இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த எண்ணியது.

1. புலிகளை அழித்து, அதன் மூலம் தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தை அழிக்க வேண்டும்.
2. சிறீலங்காவைத் தனது வல்லாதிக்க வலைக்குள் வீழ்த்த வேண்டும்.

இவ்விரண்டையும் இந்த நேரத்தில் செய்யலாம் என இந்தியா நினைத்தது.

**புலிகளை ஒழிக்க ஒப்பந்தம்**

சிறீலங்காவைப் பொறுத்த வரை,

தென்பகுதியில் மக்கள் விடுதலை முன்னணியினால் (J.V.P.) பிரச்னைகள் இருந்தன. ஆகவே இந்தியாவோடு சில விட்டுக்கொடுப்புகள் செய்வது போல நடந்து, இந்தியாவைக் கொண்டே புலிகளை அழிக்கலாம் என்று

புலிகளை அழிப்பதற்கு இணங்கியதன் மூலம் இலங்கை அரசாங்கத்தின் மீது தனது வல்லாதிக்க நலனைப் பேணக்கூடிய சில விடயங்களை ஏற்றுக் கொள்ளச் செய்தது.

ஆனால் நடந்ததோ வேறாக இருந்தது.

இந்தியாவோ, இலங்கையோ நினைத்தது போல புலிகளை அழிக்க முடியவில்லை.

இந்த ஒப்பந்தத்தின் பின்னணியிலே யாருக்குமே நேர்மை இருந்தது கிடையாது.

தனை இடைக்கால நிர்வாகியாக நியமிக்கும்படி கேட்ட போது அதையும் இந்திய அரசு மறுத்தது.

இவர்கள் எல்லோரும் எமது பிரதிநிதிகள். எமது பிரதிநிதிகளை நாமே தெரிவு செய்ய முடியாத நிலை.

திட்டமிட்டே இது குழப்பப்பட்டது.

**ஆயுதக் குழுக்கள் இறக்குமதி**

அதே சமயம், விடுதலைப் புலிகளால் ஏற்கனவே நிராயுத

இந்தக் காலகட்டத்தில் - இந்திய இராணுவம் எம்மோடு போர் தொடுத்துக் கொண்டிருந்தது.

இலங்கை இராணுவம் எம் மீது போர் தொடுத்துக் கொண்டிருந்தது.

ஆயுதக்குழுக்கள் எம்மீது போர் தொடுத்துக் கொண்டிருந்தன.

திரு பிரேமதாசா அவர்கள் எம்மோடு தொடர்பு கொண்டு, தம்மோடு பேச்சுவார்த்தைக்கு வருமாறு அழைத்தார்.

இந்த அழைப்பு இரகசியமாக யாருக்கும் தெரியாமல் எமக்கு விடப்பட்டது.

# விடுதலைப் புலிகள்

நினைத்தது. விடுதலைப் புலிகள் அழிந்து விட்டால், தனது இராணுவத்தை முழுமையாகப் பயன்படுத்தி மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) அழிக்கலாமென்று சிறீலங்கா அரசு நினைத்தது.

இவ்விதம் இருவருக்கும் பொதுவான ஒரு நிலையிலே இணக்கம் காணப்பட்டது. இரு பகுதியினருமே "புலிகள் அழிக்கப்பட வேண்டியவர்கள்" என்பதில் இணக்கம் கண்டார்கள்.

சிறீலங்கா அரசு போராளிகளுக்குப் பொது மன்னிப்புத் தந்தது. போராளிகளை ஜனநாயக அரசியலுக்குக் கொண்டுவர வேண்டுமென விரும்பியது போல நடித்தது. ஆனால் பொது மன்னிப்பு அளிக்கப்பட்டவர்களைக் கைது செய்தது.

**இடைக்கால அரசுக்கு முட்டுக்கட்டை**

இதேவேளை இந்திய இலங்கை ஒப்பந்தத்தை ஏற்

பாணிகளாக்கப்பட்டு இந்தியாவுக்கு தப்பி ஓடிச் சென்றிருந்த குழுக்களுக்கு ஆயுதங்கள் கொடுக்கப்பட்டும், புதிதாக ஈ.என்.டி.எல்.எவ். என்ற ஒரு குழு உருவாக்கப்பட்டும் இந்த, மண்ணிலே கொண்டு வந்து இறக்கி விடப்பட்டார்கள்.

இவர்கள் புலிகளுடன் மோத வேண்டும்! இதனால் போராட்டத்தின் மீதும், போராளிகள் மீதும், மக்

"இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை எம்மால் ஏற்க முடியாது, நடக்க இருக்கும் மாகாணசபைத் தேர்தலை (அந்தக்காலகட்டத்தில் நடக்கவிருந்தது) ஒத்திவையுங்கள் நிபந்தனை அற்றமுறையில், எம்மை பேச்சு வார்த்தைக்கு அழையுங்கள்" என்று பதில் அனுப்பினோம்.

அப்போதைய ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுடன் பேசிவிட்டு, பிரதமர் பிரேமதாசா எமக்குப் பதில் சொல்வதாகத் தெரிவித்தார்.



எனவே அவசரம் அவசரமாக ஒப்பந்தம் செய்யப்பட்டது. அந்த ஒப்பந்தத்தில் தமிழ் பேசும் மக்களின் நலன்கள் எதுவும் கருத்தில் கொள்ளப்படவில்லை.

மேலெழுந்த வாரியாக தமிழர் நலன்களில் அக்கறை காட்டுவது போல சில சொற்பதங்கள் சேர்க்கப்பட்டன.

ஆனால், '72 மணித்தியாலங்களுக்குள் புலிகளிடமிருந்து ஆயுதங்களைப் பெற்றுவிட வேண்டும்' என்பதுதான் ஒப்பந்தத்தில் முக்கியமானதாக இருந்தது.

ஒரு குறுகிய காலத்திற்குள் புலிகள் அழிக்கப்பட்டுவிடுவார்கள் என ஜெயவர்த்தனா நினைத்தார்.

புலிகளை அழிப்பதன் மூலம் தனது தேசிய ஒருமைப்பாட்டுக்குக் குந்தகம் விளைவிக்கும் ஒரு புரட்சியை அழிக்கலாம் என இந்தியா நினைத்தது.

காமல் அதன் அமுலாக்கத்திற்கு ஒத்துழைப்பதாக இருந்த புலிகளுக்கு வழங்கப்பட விருந்த இடைக்கால நிர்வாகத்தைக் குழப்பியது.

இடைக்கால நிர்வாகத்தில் நாம் விரும்பிய வரிசையில் பெயர்கள் அறிவிக்கப்படவில்லை. வடக்கு மாகாணத்திற்கு மூன்று, கிழக்கு மாகாணத்திற்கு நான்கு பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட வேண்டும் என்று நாம் கோரினோம். ஆனால் அந்த நிலை மாற்றப்பட்டு - வடக்கிற்கு ஐந்து; கிழக்குக்கு இரண்டு பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

(குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டப் பிரதிநிதிகள் யாரும் இடம்பெறவில்லை.)

எனவே பெயர்களை மாற்றக் கேட்டபோது இந்திய அரசு மறுத்தது. இடைக்கால நிர்வாகியாகத் தெரிவு செய்யப்பட்ட திரு. சிவஞானத்தின் ராஜினாமாவைத் தொடர்ந்து திரு. பத்மநா

களுக்கு வெறுப்பேற்படச் செய்ய வேண்டும் என்று இந்திய அரசு நினைத்தது.

எனவே இந்த இரண்டு அரசுகளும் ஒரே நோக்கத்துடன் - புலிகளை அழிக்கும் நோக்குடன் - செயற்பட்டார்கள்.

அவர்கள் நினைத்தது போல, 72 மணித்தியாலங்களில் புலிகள் அழிக்கப்படவில்லை - போர் நீண்டு கொண்டே சென்றது.

இதன்படி அப்போது இங்கே இந்தியத் தூதுவராக இருந்த டிக்சிற்றுடன் பேசிவிட்டுத்தான் முடிவெடுக்கவேண்டும் என ஜெயவர்த்தனா கூறியிருக்கின்றார்.

**'வைக்கோல்போர் காவல் நாய்'**

இப்படி ஒரு பேச்சு வார்த்தை நடப்பதை ஆதரிக்க முடியாது என்பதையும், இது இந்தியா வகித்துவரும்

## ஒரு கண்ணோட்டம்

**ஜனாதிபதி தேர்தல்**

இந்த யுத்த காலத்திலே அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து, யாரை நிறுத்துவது என ஐ.தே.க. தீர்மானித்தது.

திரு. பிரேமதாசா அடுத்த ஜனாதிபதியாகப் போட்டியிடுவது என முடிவெடுக்கப்பட்டது;

மத்தியஸ்தத்துக்குக் குந்தகம் விளைவிக்கும் என்றும், இக்காலத்தில் அப்படியான தொரு பேச்சுவார்த்தை தேவையில்லை என்றும் டிக்சிற் தெரிவித்திருக்கின்றார்.

**மாபெரும் மோசடித் தேர்தல்**

இந்த நிலையில் பேச்சு வார்த்தைகள் நடைபெறவில்லை. தமிழ் பேசும் மக்க

www.eelamview.com

லின் கடும் எதிர்ப்புக்கு மத்தியிலும் மாகாண சபைத் தேர்தல் நடாத்தப்பட்டது.

விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக இந்தியா அழித்துவிட்டது என ஜெயவர்த்தனா நினைத்தார். விடுதலைப் புலிகளை அரசியல் ரீதியாகத் தனிமைப்படுத்தவும் - இந்திய - இலங்கை ஒப்பந்தம் பெரும் வெற்றி எனக் காட்டவும் இந்த மாகாண சபைத் தேர்தல் இரு அரசுகளாலும் சேர்ந்து நடாத்தப் பட்டது. இந்த மோசடித் தேர்தல் ஜனநாயக முறை

# சிறீலங்கா அரசு

யில் நடந்ததாக உலகுக்குக் காட்டப்பட்டது.

'மக்கள் புலிகளை ஆதரிக்கவில்லை. வெறுக்கிறார்கள், மற்றைய குழுக்களையே ஆதரிக்கிறார்கள்' என்ற மாயை உருவாக்கப்பட்டது.

எனவே உலகத்தின் பார்வையில் இராணுவ ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் புலிகள் தனிமைப்படுத்தப் பட்ட நிலையில் இருக்கின்றார்கள் என்ற தோற்றம் ஏற்படுத்தப்பட்டது!

புதிய ஜனாதிபதிக்கான தேர்தலில் பிரேமதாசா அவர்கள் வெற்றிபெற்றார்கள்.

இவர்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக இந்தியப்படை புலிகளை அழிக்காத ஒரு சூழ்நிலையில் - போராட்டம், தொடர்கின்ற நிலையில் - தென் இலங்கையில் மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே. வி. பி.) நடவடிக்கைகள் வலுப்பெற்ற வேளைகளை உணர்ந்த புதிய ஜனாதிபதியான பிரேமதாசா இந்தியப் படையை திருப்பி அனுப்ப முடிவுசெய்தார். இந்தியப் படையை அனுப்பவேண்டுமென்றால் - தான் புலிகளுடனும், மக்கள் விடுதலை முன்னணியினருடனும், பேச்சுவார்த்தை நடத்தவேண்டுமென பிரேமதாசா நினைத்தார்.

**நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை**

எனவே இரண்டு அமைப்புக்களுக்கும் பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுத்தார். எமக்கு எந்தவித நிபந்தனையும் அற்ற முறையில் பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுக்கப்பட்டது

'இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் நாம் பேசமாட்டோம்' என்ற நிபந்தனையுடன் நாம் பேச்சுவார்த்தைக்கு இணங்கினோம்.

அரசியல் ரீதியாக, இராணுவ ரீதியாக எம்மை அழித்துவிட்டதாக உலகிற்குக் காட்டிய இந்தியாவுக்கு இந்தத் திடீர்த் திருப்பம் எதிர்பாராத அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

**இந்தியா ஏமாற்றம்**

இது இந்தியாவுக்குப் பெரும் இராஜதந்திரத் தோல்வியை ஏற்படுத்தியது. நாம் பேச்சுவார்த்தைக்குச் சென்ற போது, 'மிகவும் பலவீனமான நிலையில் பேசவருகின்றோம், எந்தாலும் போர் நிறுத்தத்தைக் கேட்போம். பல சலுகைகளை வேண்டி நிற்போம்' என இலங்கை அரசு எதிர்பார்த்தது.

அதேவேளை இந்திய அரசாங்கம்;

'நாம் பேச்சுவார்த்தைக்குச் சென்றதும், இலங்கை அரசு எம்மிடம் ஆயுதங்களைக் கேட்கும், நாம் மறுப்போம், பேச்சுவார்த்தை அதனால் முறிவடையும்' என எதிர்பார்த்தது.

நாம் பேச்சுவார்த்தையை மிக இரகசியமான முறையிலே நடத்தினோம். கட்டம் கட்டமாக பேச்சுவார்த்தையை நடத்தத் தீர்மானித்தோம். அந்தச் சூழலில் எதைக் குறித்து முதன்மையாகப் பேசி இணக்

கம் காண வேண்டி இருந்ததோ, அது குறித்துப்பேசி இணக்கம் காண முயன்றோம்.

எமது மண்ணில் இந்தியப் படைகள் செய்த கொலைகள், 'அழிவுகள் -எமது மக்கள் சந்தித்த துன்பங்கள் - இவை குறித்து இப்பேச்சுவார்த்தைகள் மூலம் நாம் உலகுக்கு எடுத்துச் சொன்னோம்.

**எமது பலம் குறையவில்லை**

'நாம் பலவீனப்படவில்லை. பலமாகத்தான் இருக்கிறோம். இந்தியாவோடு ஒரு போர் நிறுத்தத்தை நாம் விரும்பவில்லை, என்பதையும் எடுத்துச் சொன்னோம்.



**அமைதிப்படை அல்ல; ஆக்கிரமிப்புப்படை**

இந்தப் பேச்சுவார்த்தைகளின் போது, இருவராலும் சேர்ந்து வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் இந்தியா, தமிழீழத்தில், செய்த இனப் படுகொலைகளைப் பற்றி விபரமாகத் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் இந்தியப் படை அமைதிப்படை அல்ல அது ஓர் ஆக்கிரமிப்புப் படை என்ற எமது கருத்தும் வெளியிடப்பட்டது.

இக் கூட்டறிக்கைகளுக்கு சிறீலங்காவின் வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள் எல்லாம் முக்கியத்துவம் கொடுத்தன

அரசியல், ராஜதந்திர ரீதியாக இந்தியாவைத்தனிமைப் படுத்தியதோடு, பிரசார ரீதியாக இந்தியாவை- இந்திய ஆக்கிரமிப்புத் தன்மையை அம்பலப் படுத்தினோம்.

இந்தியப் படையை ஆக்கிரமிப்புப் படையாக, அதன் உண்மை வடிவத்தை- நோக்கத்தை தோலுரித்துக் காட்டினோம்.

அத்துடன் சிறிலங்கா அரசுடனான 17 வருட ஆயுதப் போராட்டத்தில் முதன் முதலில் ஒரு போர் நிறுத்தத்திற்கு இணங்கினோம்.

இந்தியா எதிர்பார்த்தது போல இலங்கை அரசு எம்மிடம் ஆயுதங்களைக் கேட்கவும் இல்லை, பேச்சுவார்த்தை முறிகின்ற ஒரு சூழல் ஏற்படவுமில்லை.

**இந்தியப்படையை வெளியேறும்படி ஜனாதிபதி கட்டளை**

இந்தப் பேச்சுவார்த்தையில் ஏற்பட்ட நம்பிக்கையின

டிப்படையில், திரு. பிரேமதாசா இந்தியப்படையை முந்த மண்ணை விட்டுப் போகும்படி கட்டளையிட்டார். இதை இந்தியா எதிர் பார்க்கவில்லை.

இலங்கைப் படையுடன் போர்நிறுத்தம் ஏற்பட்டதைத் தொடர்ந்து - இலங்கை அரசு, இந்தியாவை எம்மூடன் போர்நிறுத்தம் செய்யும்படி கேட்டுக்கொண்டது.

எந்த அரசாங்கத்தின் பேரில் இங்கு வந்ததாகவும், எந்த அரசின் வேண்டுகோளின் பேரில் ஆயுதக்களைவு நடத்துவதாகவும்கூறி, எம்மக்கள் மீது இந்திய அரசு போர் தொடுத்ததோ, அந்த அர

சோடு நாம் போர்நிறுத்தம் செய்த நிலையில், அந்த அரசு இந்தியாவை எம்முடன் போர் நிறுத்தம் செய்யும்படி கேட்கும் விசித்திரமான ஒரு சூழ்நிலை ஏற்பட்டது.

'றோ' வின் சதித்திட்டம்

இந்தக் காலத்திலே எமக்கும் சிறீலங்கா அரசுக்கும் இடையிலான நேரடிப்பேச்சுவார்த்தையை குழப்புவதற்கு இந்தியா பல திட்டங்களைத் தீட்டியது. 'றோ' அதிகாரியான சந்திரசேகரன் எனும் சந்திரனை லண்டனுக்கு அனுப்பி திரு. அன்ரன் பாலசிங்கத்துடன் தொடர்பை ஏற்படுத்த முனைந்தது.

இந்திய அரசோடு மீண்டும் பேச்சுவார்த்தை நடாத்தினால், இந்தியா மீண்டும் பழைய நிபந்தனைகளை விதிக்கும், ஆயுதக் கையளிப்புபற்றிப் பேசும்; இதனால் எமக்கும் சிறீலங்கா அரசுக்கும் இடையிலான பேச்சுவார்த்தையின் முக்கியத்துவம் குறைக்கப்படும் — இவற்றை நாம் உணர்ந்ததால்,

இந்தத் தொடர்பை தவிர்த்துக்கொண்டோம்.

இந்திய அரசோடு ஏதோ ஒரு வகையில் நாம் பேச்சுக்களை ஆரம்பித்தால், அரசியல் ரீதியாகவும், இராஜதந்திர ரீதியாகவும் தனிமைப் படடுப் போன இந்தியாவுக்கு நாம் உயிர் கொடுப்பது போல் அமையும்.

எனவே அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும், ராஜதந்திர ரீதியாகவும் தனிமைப்பட்டுப்போன இந்திய அரசானது வேறு சில திட்டங்களை வகுத்து எமது பேச்சுவார்த்தைகளைக் குழப்ப முயன்றது.

**காதெம் பிரகடனம்**

'தமிழீழப் பிரகடனம் செய்வோம்' என்ற வகையிலே ஈ.பி ஆர். எல். எவ். அமைப்பு

பாதுகாக்கவும், இலங்கை அரசுமீதும், புலிகள் மீதும் ஒரு இராணுவ அழுத்தத்தைப் பிரயோகிக்கவும், ஒருபடையை உருவாக்க இந்தியா திட்டமிட்டது. ஈ. பி. ஆர். எல். எவ். போன்ற சமூக விரோதக் குழுக்களுக்கு பொய்யான வாக்குறுதிகளைக் கொடுத்து, பலவந்தமாக ஆட்சேர்த்து படையை உருவாக்கியது. இந்தப்படைக்கு 'தமிழ்தேசிய இராணுவம்' என்ற பெயரும் கொடுக்கப் பட்டது.

இந்தத் தமிழ்த் தேசிய இராணுவத்தைக் கொண்டு பிரச்சனைகளை உருவாக்கி சிறீலங்கா இராணுவத்தை சண்டைக்கிழுத்து, அதன் மூலம் தனதுபடையை இங்கு நிலைகொள்ளச் செய்ய இந்தியா நினைத்தது

இந்த நோக்கத்தை நாம் புரிந்து கொண்டதால், ரீ. என். ஏ மீது இலங்கைப் படை எதிர்த் தாக்குதலை நடத்தவில்லை.

அம்பாறையிலிருந்து இந்தியப்படை வெளியேறிய பின், ரீ. என். ஏ. யினர் கிழக்கு மாகாணத்தில் தமிழ் முஸ்லீம் மக்களிடையே ஒரு கலவரத்தை உருவாக்க முனைந்தனர். நாம் விரைவாக எதிர் நடவடிக்கை எடுத்ததன் பயனாக இந்தப் படை நிலை குலைந்து போயிற்று. திட்டமிட்டபடி கலவரம் தோன்றவில்லை.

அடுத்து இந்தப்படை, இந்தியப்படையின் உதவியுடனும், 'றோ' அதிகாரிகளின் தலையோடும் இலங்கை படை முகாம்கள் மீது தாக்குதலை நடாத்தியது.

அதன் காரணமாக இலங்கை இராணுவம் எதிர்த்துத் தாக்கி, பொதுமக்களை அழிக்கும் என்று எதிர்பார்த்தார்கள். அத்துடன் தமிழர்கள் கொல்லப்படுகிறார்கள் என்று கூறி இந்தியப் படையை இங்கு தொடர்ந்து நிலைகொள்ளச் செய்ய இந்தியா முயன்றது.

நாம் இணக்கம் கண்டதன் பேரில் இலங்கைப் படை, எதிர்த் தாக்குதலை நடாத்தவில்லை. தற்காப்புக்கு நடவடிக்கை மட்டும் எடுத்தது அதனால் இந்தியாவின் இரண்டாவது முயற்சியும் தோல்வி கண்டு போனது.

மூன்றாவதாக, முப்பத்தொன்பது மக்கள் தொண்டர் படையை சேர்ந்த முஸ்லிம் இளைஞர்களை ஈ பி. ஆர் எல். எப் கட்டுக் கொன்றது. இதன்மூலம் ஒரு தமிழ்-முஸ்லிம் கலவரம் உருவாகும் என எதிர்பார்த்தார்கள்.

# பேச்சுவார்த்தை

இந்தியா அதைமறுத்து — "இலங்கை — இந்திய ஒப்பந்தத்தை புலிகள் ஏற்கவேண்டும். ஆயுதங்களைப் புலிகள் கையளிக்க வேண்டும்" எனக் கேட்டுக்கொண்டது.

**போர்நிறுத்தம்**

எம்மைப் பொறுத்தவரை, இராணுவ ரீதியாகவோ, அரசியல் ரீதியாகவோ யாருமே எம்மீது அழுத்தம் போட முடியாத ஒரு சூழ்நிலையிலேயே நாம் இருந்தோம்.

படிப்படியாக இந்தியா எமது நிலைமையைப் புரிந்து, எம்மோடு போர்நிறுத்தத்திற்கு இணங்கியது.

மூலம் அறிக்கைகளை விடச் செய்தது. இலங்கை அரசு அதற்குப் பயந்து தம்மோடு பேசும். அதன்மூலம் எம்மீது கூடியளவு அழுத்தத்தைப் போட்டு எங்கள் பேச்சுவார்த்தைகளை முறிக்கலாம் என முயன்றது

ஆனால் அவர்களது பிரகடனத்திற்கு நாமும் இலங்கை அரசும் முக்கியத்துவம் கொடுக்கவில்லை.

**சமூகவிரோத இராணுவம்**

அடுத்து, தான் அமைத்த மாகாணசபையைக் காப்பாற்றவும், தனது நலன்களைப்

அதுவும் நடைபெறவில்லை. அம்பாறையிலிருந்து வெளியேறிய தமிழ் தேசிய இராணுவம், மட்டக்களப்பில் பெருமளவு தங்கி, ஒரு நீண்டகாலப் போருக்கு ஆயத்தமாக இருந்தார்கள். ஆனால் எதிர்பாராத எமது தாக்குதல்களினால் நிலைகுலைந்து போன இந்த இராணுவம் அப் பகுதியை விட்டு வெளியேறியது.

ஒரு பெரிய நீண்ட இழப்புக்களுடன் கூடிய போரை இந்தியா எதிர்பார்த்தது. அதுபோல சிறீலங்காவும்

(8ம் பக்கம் பார்க்க.)

www.eelamview.com

# பிடிவாதக்காரக் கிழவன்

சுப்பையாக் கிழவன் தனது கைத்தடியில் முகம் புதைத்தபடி அழுது கொண்டே இருந்தார். அவரை அழ வேண்டாம் என்று சொல்ல யாரும் இல்லை ஆறுதல் சொல்லவும் யாருமில்லை.

''பாவம் கிழவன் என்னதான் பிடிவாதக்காரனாக இருந்தாலும் கூட பிள்ளைப் பாசம் இருக்கத்தானே செய்யும்''

''அவள் பெடிச்சி செத்து மாதம் ஒண்டாச்சல்லே.''

கிழவன் அழுவது ஊருக்குத் தெரிந்துவிட்டால் இவ்வாறுதான் சிறிய அனுதாபம் கிடைக்கும்.

''சுப்பையாக்கிழவன்'' என்றுதான் அவரை ஊரார் அழைப்பது வழக்கம். இத்தனைக்கும் அவர் வயது முதிர்ந்த ஆளில்லை.

சுமார் 55 வயது தான் இருக்கும்.

சில துரதிஷ்டம் பிடித்த மனிதர்களுக்குத் துன்பம் வரும் போது ஒன்றன்பின் ஒன்றாக வந்துவிடுவது வழக்கம்.

மூன்றாவது பிள்ளைக்குத் தந்தையான பொழுதே அவர் மனைவியை இழந்துவிட்டார்.

அவருடன் கூடப்பிறந்த தொய்வ நோயுடன் மனைவி பிள்ளையினது பிரிவுக் கவலையும்சேர, உடல் தளர கிழவன் என்ற பட்டம் நிலையாகவே கிடைத்து விட்டது.

மூத்தவன் ஆண் இளையவள் பெண். இருபிள்ளைகளுடனும் விவசாயம் செய்தே வாழ்க்கையை ஓட்டிவந்தார்.

ஏட்டுப் படிப்புடன் சேர்த்து தனது பிள்ளைகளுக்கு மனித நேயத்தையும், மாறும் உலகத்தையும் பற்றிக் கதைகதையாகக் கூறுவார்.

இவைகள்தான் தனது பிள்ளைகளுக்கு கிழவன் கொடுத்த கல்வி. பிள்ளைகளின் விருப்பமாக இருந்தாலும் சரிதான் அல்லது ஏதாவது ஓர் ஊர் வழமையாக இருந்தாலும் சரிதான் கிழவனிடம் ஒரு தனித்துவமான கருத்து இருக்கும். அக்கருத்தை விட்டுக்கொடுக்காத தன்மையும் இருக்கும்.

பெரும்பாலும் அது சமூகம் ஏற்கத் தயங்கும் புதிய கருத்தாகவே இருக்கும் இதனாலேயே அவருக்குப் 'பிடிவாதக்காரக் கிழவன்' என்ற பட்டப் பெயர் உண்டு.

இத்தனைக்கும் கிழவர் அதிகம் படித்ததில்லை. கொஞ்சம் வாசிக்கத் தெரியும். மற்றும் படிப்பெல்லாம் அனுபவம் கொடுத்த படிப்பினைதான்.

தலையிடியும், காய்ச்சலும் தனக்கு வந்தால்தான் தெரியும் என்பார்கள். அது அவ்வளவும் உண்மைதான்.

சகமனிதர்களின் மனவுணர்வுகளை அறிந்து அவற்றையும் மதிக்கும் வண்ணம் கிழவனை வளர்த்து விட்டது அவருடன் கூடப்பிறந்த தொய்வு நோயும், அவர் அன்பு வைத்திருந்த மனைவியின் மறைவும். இந்தத் துக்கம் மறையுமுன் தனது செல்வப்புதல்வர்களில் ஒருவனை இழந்ததும், அவருக்கு வாழ்க்கைத்தத்துவத்தை ஓரளவிற்குப் புரிய வைத்துவிட்டது மற்றவர்களுடைய மன உணர்வுகளை, எதிர்பார்ப்புக்களை புரிந்து கொள்ளும் மனப்பக்குவம் நிரம்ப உண்டு.

இதனால் ஒரு மனிதனின் நியாயமான, மனிதாபிமானம் நிறைந்த உணர்வுகள் சமூகத்தால் புறக்கணிக்கப்படும் பொழுது அப்படிப் புறக்கணிக்கப்படுவது நியாயம் என்று கிழவனின் மனதில் பட்டுவிட்டால் எளிதில் விட்டுவிட மாட்டார்.

இவ்வாறு தான் எட்டு அல்லது ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னர்...

சுப்பையாக் கிழவனின் சிறுவயது நண்பன் பொன்னுச்சாமி திடீரென மாரடைப்பால் மரணமானார். அவரது மூத்த மகள் திருகோணமலைத் துறைமுகத்தில் தொழில் புரிபவள். அங்கிருந்து வந்து தந்தையின் மரணச் சடங்கில் கலந்து கொள்ளப் பிந்திவிட்டது. சவம் சுடலைக்குச் சென்றுவிட்டது.

பாசம் மிகுந்த அந்த மகள் தந்தையின் உடலை இறுதியாக ஒருமுறை பார்த்துவிடத் துடித்தாள். சுடலைக்குக் கூட்டிச்சென்று காட்டுமாறு கெஞ்சினாள், கதறினாள்.

ஆனால் சமூகத்தின் மூத்த உறுப்பினர்கள் பழைய சம்பிரதாயங்களையும், சமூகக் கட்டுப்பாடுகளையும் காரணம் காட்டி, ஒரு பெண் சுடலைக்குச் செல்லக்கூடாது என்ற முடிவை அழுத்தந்திருத்தமாக எடுத்துவைத்தனர்.

பெரியவர்கள் மௌனமாகத் தங்களுக்குள் முணுமுணுத்தார்களே அல்லாமல சுப்பையாக் கிழவனின் முடிவினை ஏற்கவும் இல்லை, அதை மறுக்கவும் இல்லை. சுற்றத்தாரின் தொடர்ச்சியான மௌனத்தை அவதானித்தவர், இப்படியான வாதங்களைச் சமூகம் எளிதில் ஏற்றுக்கொள்ளாதுதான்' என்றவர்,

'எடி பொடிச்சி நீ அழாதை! என்னோட வா' எனக் கூறியவாறு, தனது இரட்டைத் திருக்கல் வண்டியில் ஏற்றி சுடலைக்குக் கூட்டிச்சென்றார்.

சுடலையிலும் ஒரு போராட்டத்தை நடத்தி, சொல்லப்போனால் சிறிதளவு பலாத்காரத்தையும்பாவித்து, பொன்னுச்சாமியின் பிரேதத்தைச்

பிடிவாதமாக நின்ற மகன் தனக்கென்று தந்தை சேர்த்து வைத்திருந்த சொத்துக்களை வித்துச்சுட்டு வெளிநாட்டுக்குக் கிளம்பிவிட்டான். அதன் பின் கிழவனைத் தனிமை வாட்டி வதைத்தது.

மகளைப்பற்றி சைக்கிளில் வரும் இளைஞர்களிடம் இருந்து இடைக்கிடை கிடைக்கும் சில செய்திகள் கிழவனை பெருமிதத்தில் ஆழ்த்தும். தனதுமகனின் அந்நியமாகத்தால் மனம் புண்ணாகியிருக்கும் செய்திகள் அவருக்கு மகளைப் பற்றிய உற்சாகத்தை ஊட்டும்.

இப்போது தனிமையில்தான் அதிக நேரத்தைக் கிழவன் செலவளிக்கின்றார். அவருடைய இரட்டைமாட்டு வண்டியிலிருந்து கிடைக்கும் வருமானம்தான்கிழவனதும், வாய் பேசாத அந்த இரு உயிர்களினதும் வயிற்றைக் கழுவிக் கொண்டிருக்கின்றது.

ஒரு மாலைநேரம், பெண்கள் இருவர் சைக்கிளில் வந்திறங்கினார்கள். கிழவன் மாடுகளுக்கு வைக்கோல் போட்டுக்கொண்டிருந்தார். இவர்களைக் கண்டதும்

'பிள்ளையள் வாங்கோ வாங்கோ ..

தனது மகளுடன் வாழ்விலும், சாவிலும் அருகிலேயே இருப்பவர்கள் துன்பத்தையும் இன்பத்தையும் சமமாகவே பங்கெடுக்கொள்பவர்கள்.

அவர்களைக் கண்டதும் மகளைக் கண்டதைப் போல் அவருக்கு மகிழ்ச்சி.

'பிள்ளைகள் எப்படி சுகமாக இருக்கிறியளோ' - கிழவன் தனது மகளை மட்டும் விசாரிக்காமல் போராளிகள் அனைவரையும் தனது பிள்ளைகளைப் போலவே பார்க்கின்றார் வந்த பெண்பிள்ளைகளின் மனதை இது தொட்டுவிட்டது.

அப்பு வந்து அப்பு உங்கட மகள் போன புதன் கிழமையன்று வீரமரணம் அடைஞ்சிட்டா!

சொல்லி முடித்ததும் கிழவனையே பார்த்தபடி மௌனமானார்கள். சிரிப்பில் இருந்த கிழவனின் முகம் திடீரென மாறியது வீட்டு முற்றத்தில் நின்ற நிழல்மரவள்ளி மரத்தைப் பிடித்தபடி மெதுவாக நிலத்தில் இருந்தார். சால்வையால் முகத்தை மூடியபடி

இருக்க உடல் இடைக்கிடை குலுங்கிக்கொண்டிருந்தது.

கிழவன் அழுகின்றார் சுமார் 10 நிமிடங்கள் சென்றிருக்கும்

'அப்பு நாங்கள் போட்டு வரப்போறம்'

நிமிர்ந்து பார்த்தகிழவன்சால்வையால் முகத்தைத் துடைத்தபடி கைத்தடியின் துணையின்றியே நிலத்தில் கையூன்றி எழுந்தவர், குரல் தளுதளுக்கச்சொன்னார்...

'பிள்ளையவை போட்டு வாங்கோ கவனம் பிள்ளையள்'...

மகள் இறந்து மாதம் ஒன்றாகிவிட்டது. வீட்டுத் திண்ணையில் இருந்தபடி கைத்தடியில் முகம் புதைக்கவண்ணம் கிழவன் அமர்ந்திருப்பது அடிக்கடி காணும் காட்சியாகி விட்டது.

மகளின் மரணத்தின் பின்னாலிருந்த உன்னதமான தியாகம் காரணமாக மெது மெதுவாகப் பிரிவுக்கவலையை மறந்துகொண்டிருந்தார். இருந்தாலும் மகளின் உடலை இறுதிக்கடவையாக ஒருமுறை காணவில்லையே என்ற ஏக்கம்தான் கிழவரின் தற்போதைய கவலை.

O O O



'ஐயா எங்கட அருச்சுனனை லொறி அடிச்சுப்போட்டுது. செத்தபடி றோட்டில கிடக்குது'- அழுதபடி சொன்னாள், தனது வளர்ப்பு நாயின் அகால மரணம் அந்தச் சிறுமியின் மனதை உடைத்து விட்டது.

'அழாதை மகளே.. நாங்கள் வேறொரு நாய்க்குட்டி வாங்கி வளர்ப்பம். இப்ப வா! நாங்கள் அதைக் கிடங்குவெட்டி தாட்டுப்போட்டு வருவம்.

மகளுக்கு ஆறுதல் கூறிய சுப்பையாக் கிழவன் மண்வெட்டியைத் தோளில் போட்டுக்கொண்டு செல்ல முயன்றார்.

'ஐயா, அருச்சுனனை றோட்டுக்கரையில் தாக்கவேண்டாம். எங்கட வீட்டு வளவுக்கை கொண்டுவந்து தாப்பம்'

தனது பிரியத்திற்குரிய வளர்ப்பு நாய்க்கு இறுதிக் கிரியையைச் செய்ய அந்தச் சிறுமி விரும்புகின்றாள் என்பதைதந்தை அறிந்துகொண்டா

பாசத்தால் எழுந்த அவ்விளம் பெண்ணின் புலம்பல் கிழவனின் மனதில் பல கேள்விகளை எழுப்பியது.

தனது மனைவியின் உடலைப் பார்க்கவிடாது ஏதாவது ஒருகாரணத்தைக் கூறி சமூகம் தடுத்திருந்தால் தனது மனநிலை எப்படியிருக்கும் என கிழவன் எண்ணிப்பார்த்தான்.

''எல்லாரும் கதைக்கிறதை நிப்பாட்டுங்கோ''

சுடலைக்குள் வைத்து இறுதியாகப் பார்ப்பதற்கு கிழவன் உதவினார்.

இதன்மூலம் காலங்காலமாக அந்த ஊரில் இருந்துவந்த ஒரு மூடத்தனமான சமூக விதியை மீறிக்காட்டினார்.

மனைவியினதும் பிள்ளையினதும் மரணங்களின்பின் அதாவது சுமார் 15 வருடங்களின் பின் சுப்பையாக் கிழவன

'அது லொறி அடிச்சுச் சிதறிப்போச்சு பிள்ளை. அதை வீட்டுக்குத் தூக்கேரேலாது. நாங்கள் அதிலேயே, வெள்ளைத்துணி கொண்டுபோய் மூடி, கிடங்குவெட்டி வடிவாகத் தாட்டுவிடுவம்.

மகளின் உணர்வுகளை உடைக்காது.அவளைத்தேற்ற முனைகின்றார் தந்தை. ஆனால் மகள் உறுதியாகவே இருந்தாள்.

''வேண்டாம் ஐயா! சாக்கில கட்டித் தூக்கிக்கொண்டு வந்து விட்டுல தாப்பம்.''

ஊரில் பிடிவாதக்காரன் என்றுதான் சுப்பையாக்கிழவனை அழைப்பார்கள் ஆனால்அவர் ஒன்றும் முரட்டுப்பிடிவாதக்காரனல்லை.

மனத்தை, உருக்கக்கூடிய உணர்வுகளுக்கு முன்னால், மானுட நீதிக்கு முன்னால் அவர் இளகிய மனம் படைத்தவர்.

மகளின்வேண்டுதல் வெற்றி பெற்றுவிட்டது.

பல ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த இந்தச் சம்பவத்தை நினைத்துவிட்டுக் கிழவன் அழுகிறார். அந்த மகள் இப்போது உயிரோடு இல்லை.

✲ ✲ ✲

இப்பொழுதெல்லாம் கிழவருக்கு ஒரு புதுத்துணை வந்து சேர்ந்துவிட்டது. இனிப்புக்காகவும், ரொபிக்காகவும்

(9ம்பக்கம் பார்க்க)

கரகரத்த கிழவனின் குரல் அங்கே கட்டளைபோல் ஒலித்தது. அங்கே அசாதாரண அமைதி நிலவியது.

''தகப்பன்ரை சவத்தை மகளுக்கே காட்டாமல் சடுகிற காட்டுமிராண்டிச் செயலுக்குச் சம்பிரதாயச் சாயல் பூசக்கூடாது. இறந்த தனது தந்தையை ஒரு மகள் எங்கே வேண்டுமென்றாலும் போய்ப் பார்க்கலாம் அதைத் தடுக்க மற்ற எவருக்கும் உரிமை இடையாது. அவளைச் சுடலைக்குப் போய்ப் பார்க்க விடவேணும்.'',

சிறிதுநேரம் பேச்சை நிறுத்தி, சுற்றும் முற்றும் பார்த்தவர் தொடர்ந்தார்.

''நியாயமான உணர்வுகளுக்குத் தடைபோடக்கூடியவை சம்பிரதாயங்கள் இல்லை அவைகளைச் சமூக விதிமுறைகள் என்று அழைக்கவும் முடியாது.''

சுப்பையாக் கிழவன் இதுமி இதுமி இதுவரைநாளும் சமூகத்தால் நோக்கப்படாத மற்றப்பக்கத்தின் நியாயங்களை உணர்ச்சி ததும்ப விபரித்துக் கொண்டிருந்தார்.

அவரின் வாதங்களுக்குஎதிர் வாதம் வைக்கமுடியாத ஊர்ப்

தனது வாழ்வின் கடினமான பாதைகளைக் கொண்ட அந்நியாயத்திலுள் அடியெடுத்து வைத்தார்.

இப்பொழுது அவரது இளைய மகள் சூழ்நிலைகளின் தாக்கத்தால் போராளியாக மாறிவிட்டாள்.

அதைத் தொடர்ந்து மகனின் வெளிநாடு செல்லும் ஆசையை கிழவன் எதிர்த்தார். ஆனால மகன் பிடிவாதமாக இருந்தான். அழுது புலம்பி பயமுறுத்தி தனது முடிவைச் செயற்படுத்த முனைந்தான்.

'ஐயா தோட்டம் செய்து நாங்கள் முன்னேறப் போவதில்லை. வெளி நாட்டுக்கும் போய் வேலை செய்தால் நல்ல காசு, உழைச்சிடலாம். அந்தஸ்தோடயும் வாழலாம். அவனுடைய பொருளாதாரத் தத்துவத்திற்கு தந்தைகொடுத்த விளக்கம் எடுபடவில்லை

கிழவன் அடிக்கடி சொல்லும் 'சமூகம் மாறிக்கொண்டு போகுது, நாங்களும் அதுக்கு ஈடுகொடுக்கவேணும்' என்ற வார்த்தைதையே திருப்பித் திருப்ப தந்தை மீது ஏவிவிட்டான். கிழவனின் விளக்கங்கள்செல்லாக்காசாகிவிட்டன.

www.eelamview.com

# பிடிவாதக்காரக் கிழவன்

(8 ம் பக்க தொடர்ச்சி)

அவரை நாடிய அயல்வீட்டுச் சிறுமி இப்பொழுது கிழவனின் சுவையான கதைகளிலும் தன்னை மறந்து விடுகிறாள்.

படலைக்குள் தபாற்காரன் மணியடித்தான்.

ஓடிச்சென்ற சிறுமிதான் தபாலை வாங்கிவந்தாள்.

அது வெளிநாட்டுத்தபால், மகன் அனுப்பியது என்பதை உடனேயே கிழவன் புரிந்து கொண்டார்.

மண்ணுக்காக மரணித்த மகளையும், பணத்தை மட்டும் குறிக்கோளாகக்கொண்டு வெளிநாடு சென்ற மகனையும் நினைத்துப் பார்க்கிறார். பெருமூச்சு உதிர்த்தவாறு கடிதத்தைப் பிரிக்கிறார்.

அன்புள்ள ஐயா அறிவது தங்கச்சி இறந்த செய்தி அறிந்தேன். நான் கூப்பிட்ட நேரம் இங்கே வந்திருக்கலாம். நல்ல சம்பளத்தோட வேலை பார்த்திருக்கலாம். ஆனால் 'மண்ணுக்காக' - 'மக்களுக்காக' என்றொரு கடிதத்தை தான் எனக்குத் திருப்பி அனுப்பியிருந்தாள் இனி யோசித்துப் பிரயோசனம் இல்லை இக் கடிதத்தோடு 500 டொலர் காசுக்கட்டளை அனுப்புகிறேன். தங்கச்சியின்ரை ஆட்டத்துவசத்தை நல்ல சிறப்பாக ஊருக்கெல்லாம் அவிச்சுக் கொடுத்து செய்துவிடுங்கோ மிச்சப்பணத்தை நீங்களே வைச்சிருங்கோ உங்கடை இறுதிக்காலத்துக்கு உதவும்...

மேலும் ......

தொடர்ந்து அவர் படிக்கவில்லை. உணர்ச்சிவசப்பட்டவராகக் கைத்தடியை ஊன்றிக்கொண்டு கிழவர் எழும்புகிறார். கடிதத்தையும் காசோலையையும் துண்டு துண்டாகக் கிழித்தெறிந்தார். உவன்ர பிச்சைக்காக எனக்கு வேண்டாம். அடிமை வேலைசெய்து சேர்த்த பணத்திலை என்ரை வீரமகளின்ரை ஆட்டத்துவசத்தைச் செய்ய மாட்டன். அதைவிட என்ரை மகளுக்கு அப்படியொரு கிரியை செய்யாமல் விடுவதே மேல், காசும் பணமும் மட்டுந்தான் இந்த உலகத்தில் பெரிசெண்டு அவனும், ஏன் உலகமும் சொல்லட்டும் எனக்குக் கவலையில்லை.

கிழவன் உணர்ச்சிவசப்பட்டுப் பேசிக்கொண்டிருப்பது சிறுமிக்குச் சிறிது அச்சத்தைக் கொடுத்தது. நேரம் செல்லச் செல்ல அவர் தன்னை ஏசவில்லை என்பதைச் சிறுமி புரிந்து கொண்டாள்,

கிழவன் தொடர்ந்து ஆவேசம் வந்தவர்போல் கத்துகின்றார்.

"எங்கேயோ பிறந்து ஒரு பெரிய இலட்சியத்திற்காகத் தங்களை அர்ப்பணித்து, காட்டிலையும், மேட்டிலையும், வயல் வெளிகளிலும், பனை வடலிக் ஞச்குள்ளேயும் செத்துவிழுகின்றான்கள். அவங்கட சாவுகளை இவன் கொச்சைப்படுத்துறான். எனக்கு இவன்ரை சல்லிக்காசுகூட வேண்டாம். என்ரை கை, கால் இருக்கு; அதுக்கு வலு விலாடடியும் ரோசம் இருக்குது. இந்த மண்ணில கிடந்து அரைச்சு, அரைச்சு என்டாலும் என்னால உழைச்சுத் தின்ன ஏலும். அதுக்குப் பிறகு தெருவிலையோ, திண்ணையிலோ என்ரை உயிர் போகட்டும். காகமும் நாயும் என்ரை சவத்தை பிச்சுத் தின்னட்டும்.

உணர்ச்சிவசப்பட்ட நிலையில் கிழவன் மாடடுக் கொட்டிலை நோக்கி நடக்கின்றார்

என்ரை மகளின்ரை செத்த வீட்டைக் கொண்டாடிய, அவளோடசேந்து கிரிஞ்ச மண்ணின் மைந்தர்களே அவளின்ரை ஆட்டத்துவசத்தையும் கொண்டாடட்டும் ஆனால்.

விக்கித்தபடி கிழவன் தொடர்கின்றார் ... 'ஊருக்கு அழுதுகாட்டவும் வேண்டாம் அன்னச் போடவும் வேண்டாம் அந்தப் பிள்ளையள் ஒரு நிமிசம் எழும்பிநின்று உளப்பூர்வமாக அஞ்சலி செலுத்துவாங்கள். அவளாமே காணும்

அழுகைக்கூடாகவே சொல்லி கொண்டு மாடுகளை அவிட்டு வண்டியில் பூட்டுகிறார். கிழவனின் இந்தச் செய்கைகளைப் பார்த்த சிறுமி விழுந்து விழுந்து சிரிக்கின்றாள்.

"நீ சிரி அம்மா நீங்கள் இப்படியே தொடர்ந்தும் சிரித்துக்கொட்டே இருக்க வேணும் அதுக்காகத்தானே இன்னை இப்ப ஒரு புயலே அடிச்சுக் கொண்டிருக்குது" -கிழவனின் இந்த வார்த்தைகள் சிறுமிக்கு விளங்கவில்லை.

அவள் தொடர்ந்து சிரித்துக் கொண்பட இருக்கின்றாள்

# மகளிர் படைப்பிரிவு......

(5ம் பக்கத் தொடர்ச்சி)

தலைமைத்துவத்தை வளர்த்தெடுப்பதற்காகவும், அவர்களை சமூகத்தின் செயலூக்கமுள்ள ஒரு சக்தியாக மிளிரும்படி செய்வதற்காகவும் தலைவர் பிரபாகரனால் எமது இயக்கத்தின மகளிர் படைப்பிரிவுக்கு முதன் முறையாக ஒரு பெண் பொறுப்பாளர் நியமிக்கப்பட்டார்.

அவர்தான் கரவெட்டியை பிறப்பிடமாகக் கொண்ட மேஜர் சோதியா [மைக்கல் வசந்தி] ஆவார்.

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த அப்பொறுப்பை ஏற்றுக் கொண்ட சோதியா, சில மாதங்களிலேயே ஓய்வு ஒளிச்சல் அற்ற உழைப்பின் காரணமாக சுகயீனம் அடைந்து அதன் காரணமாக மரணமடைந்தார்.

இவருடன் சேர்ந்து இந்திய-தமிழீழ விடுதலைப் போரில 28பெண் போராளிகள் எமது மக்களின் சுதந்திரத்திற்காகப் போராடி வீரமரணமடைந்துள்ளனர்.

அடக்கி ஒடுக்கப்பட்ட எமது மக்களின் சட்டபூர்வமான விடுதலைப் போராட்டத்தை வளர்த்துச் செல்வதில் எமது இயக்கத்தின் மகளிர் படைப்பிரிவானது பெரும் பங்கை ஆற்றியுள்ளது.

எமது பெண் போராளிகளிடம் இருந்த மனோதிடமும், உறுதிப்பாடும், ஆளுமையும் தமிழீழப் பெண்கள் மத்தியில் தேசாபிமான உணர்வை ஏற்படுத்தி சுதந்திர இலட்சியத்தை நோக்கி அவர்களை அணிதிரட்டியது.




களித்திருக்காதே....
விழித்திருப்பாய் நீ !

நேற்றுன் காலைக்
கடித்த புடையன்
மாற்றம் கண்டு
விட்டதா? அதை நீ
ஏற்றிடல் வேண்டா!
மீண்டும் அப்பாம்பு
சீற்றம் கொண்டு
தீண்டுதல் கூடும்...!

களித்திருக்காதே....
விழித்திருப்பாய் நீ!

வேலை இன்னும்
உண்டு! நீ மறவாய்
தோலை மரத்துப்
போக விடாதே!
மூலை முடுக்குகள்
உற்று நோக்கு!
காலை யாரும்
வாரலாம்...... கவனி!

களித்திருக்காதே......
விழித்திருப்பாய் நீ!

வீரப் புலிகளை
வைத்த புதைகுழி
ஈரம் இன்னும்
காய்ந்திடவில்லை
யார்—அப்புலிகளை
மறப்பார்? அட இப்
பரம் உணர்க;
விடாப்பணி ஆற்று!

களித்திருக்காதே........
விழித்திருப்பாய் நீ

கைதட்டல் மிக
நன்றே! விழாவும்
மெய்சிலிர்ப்பும்
மிக மிக நன்றே!
செய்! சரி! ஆனால்
நேற்றெம் இளைஞர்
எய்த அம்பின்
இலக்கை மறவாய்!

களித்திருக்காதே......
விழித்திருப்பாய் நீ!

www.eelamview.com

# எழுகதிர் மண்ணில் இது ஒரு தொடக்கம்

## ஒரு போராளியின் குருதிச்சுவடுகள்

...அவனைத்தாங்கின ஊர் ஆரையம்பதி.

சுற்றிவளைப்புக்களில் - எதிரிகளின் சமூகத் தேடலுக்கு நடுவில் பலமுறை அங்கே தான்ஜெயம் இருந்தான்.

இம்முறை ஆரையம்பதி கிராமத்தை சிங்கள சிறீலங்காப்படை பெரிய எண்ணிக்கையில் வளைத்திருந்தது. இரண்டாயிரம் பேர் இருக்கலாம்.

முற்றுகையை உடைத்து ஊருக்கு வெளியே பாய்வது என்று முடிவு செய்தான் ஜெயம். மரணத்தோடு விளையாடுவது அவனுக்குப் புதியதல்ல ஆனால் இம்முறை மரணம் அவனுக்கு மிகவும் பக்கத்தில் இருந்தது.

வீட்டு வேலிகளால் தாவி ஆரையம்பதியின் பின்புறமாய்க்கிடந்த உப்பாற்றங்கரைக்கு வந்தான். அவனை நன்றாகத் தெரிந்த மீன்பிடித் தொழிலாளர்.இருவர் தோணியோடு காத்திருந்தார்கள்.

ஒருவன் சொன்னான்.

"ஏறு தம்பி தோணியில... இந்த உதவியைக் கூடச்செய்யல்ல எண்டா, நாங்க மனுசனுகளா? என்ன?"

தோணி உப்பாற்றில் இறங்கிற்று.

ஊரினுள்ளே துப்பாக்கிகளின் உறுமல் ஓசை - நாய்களின் ஊளைக் கூச்சல் - விட்டு விட்டு மனித ஓலங்கள்.

அவர்கள் தோணியை-விரைவாகவும் அக்கறையோடும் ஓட்டினார்கள்.

தோணி கூப்பிடு தூரத்துக்குப் போகவில்லை... கரையிலே இருந்த சிங்களப் படையின் துப்பாக்கிகள் தோணியை நோக்கி வெறிகொண்டு உறுமத் தொடங்கின.

ஜெயத்தையும் தோணியையும் அவர்கள் அடையாளம் கண்டுவிட்டார்கள் தொடர்துப்பாக்கிக் குண்டுகளின் நடுவே - உப்பாற்றைக் கிழித்துத் தோணி பறந்தது.

சிலமணித்துளிகள்தான். தோணியைச் சிறீலங்காப் படையின் 'ஹெலிகப்டர்' ஒன்று துரத்தத் தொடங்கிற்று. வானத்திலிருந்து சடசட' என்று துப்பாக்கிக் குண்டுகள் தோணியை நோக்கிப் பாய்ந்தன

தோணிக்காரர்கள் இருவரும் தன் முன்னே பிணங்களாகச் சுருண்டபோது ஜெயம் துடியாய்த் துடித்தான்.

ஜெயத்தின் கண்களில் நீர் பொங்கிற்று தன்னைப்பற்றி அவன் நெஞ்சமும் கவலைப்படவில்லை ஆனால் விடுதலைப்புலியானவனைக் காப்பாற்றதோணியையும் தன்னிகொண்டு வந்தார்களே-

அவர்கள் பிணங்களாய்


ஒரு துப்பாக்கிக் குண்டு தோணியில தளைபோட்ட போது தோணி நீருள்ளே அமிழ்த்தியபோது - ஜெயம் தண்ணீரில் குதித்தக் கழியோடத் தொடங்கினான்.

உப்பாற்று நீரை மூடிக்கிடந்த 'சல்வீனியா' மிதப்புச் செடிகளில், உடல்மறைத்து நீந்தினான் அவன்.

இன்னுந்தான் ஹெலிகப்டர் பாதி கவிழ்ந்த தோணியைச் சுற்றி குண்டுகளை பொழிந்து கொண்டிருந்தது. "இறந்தார்கள் எல்லோரும் என்று முடிவு கட்டிய 'ஹெலிகப்டர்' அந்த இடத்தைவிட்டுத் திரும்பியது.

நான்கு மணி நேரம் நீந்தி, உப்பாற்றின் நடுவில் இருந்த ஒரு தீவை அடைந்தான் ஜெயம்.குடல் காய்ந்து நாக்கு வரண்ட நிலையில் -கண்ணாச் செடியில் கூடுகட்டி இருந்த கொக்கின் முட்டைகளை பச்சையாகவே அவன்குடித்தான்.

"ஜெயத்தின் கதை முடிந்தது' என்றே ஆரையம்பதியில் பேசிக்கொண்டார்கள்.



மேஜர் ஜெயம்

ஊர் கண்ணீரில் மூழ்கியது — ஆனால்

தீவில் இருந்து பல மணி நேரம் நீந்தி-மறுநாளே அவன் ஆரையம்பதி திரும்பினான். 1986-1987 காலப்பகுதியில் இது நடந்தது.

அந்த விடுதலைப் புலியின் வாழ்க்கையில் இப்படித்தான் அடிக்கடி உடல் சிலிர்க்கும் நிகழ்வுகள்.

✻ ✻

16-2-1945 இல் மட்டக்களப்பில் -அமிர்தகழி என்னும் சிற்றூரில் ஜெயம் பிறந்தான். தந்தை பெயர் காத்தமுத்து தாய் பெயர் அழகம்மா. எழிலான உப்பாற்றங் கரையில் வீடு. நிலாவெளிச்சத்தில் தோணியில் ஏறி உப்பாற்றை வலம் வருவான் ஜெயம்.

அப்போதெல்லாம் -ஜெயத்தின் புல்லாங்குழல் இசையில் உப்பாறு மெய்சிலிர்க்கும். உப்பாற்றின அலைகளில்விடுதலையின் உயிர்த்துடிப்பை அவன் கண்டான். மீன்கள் துள்ளிப் பாயும் - நிலாவெளிச்சத்தில் தோணிகள் கறுப்பு வாத்துக்களாய் நீந்தும் - கரையில் தென்னந்தோப்பு சிரிக்கும்.

அந்த மெழுகுவர்த்தி பிற்காலத்தில் பிரபாகரன் தலைமையில் முழு வெளிச்சத்தை அள்ளிப்பொழிந்தது.

ஜெயத்தின் தந்தை உறுதிமிக்க தமிழினப் பற்றாளராக இருந்தார் வீட்டில் பாய்ந்து பிள்ளைகளை அள்ளிச் செல்லும் படைவெறியர் தொல்லைக்கு அடிக்கடி தாய் ஆளானாள்.

ஜெயத்தின் அண்ணன்-காசி ஆனந்தன்.

இந்தப்புரட்சிக் கவியின் வரலாற்றை அறியாதவர்கள் இல்லை, தனது பாடல்களால் விடுதலைக்கு உரமிட்டவர். தமிழனின் வாழ்வுக்கு விடுதலையே வழி என்று முழக்கமிட்டவர். மண்மீது பற்றுக்கொண்ட இளைஞர்களின் இதயங்களில் எழுச்சியை ஊட்டியவர். தமிழ் இளைஞர்களின் போராட்ட உணர்வுக்கு எண்ணெய் வார்த்தவர் அதனாலேயே தனது வாழ்க்கையின் 5 ஆண்டுகளை சிங்களச் சிறைகளில் கழித்தவர்.

தம்பி சுதர்சன் இரு ஆண்டுகளும், தங்கை சிவமலர் ஓராண்டு காலமும் சிறைவாசம் இருந்தனர். இந்தவீட்டில் - இந்தக் குடும்பத்தில் தான் - ஜெயமும் - நெருப்போடு நெருப்பாய் இருந்தான்

பதின்மூன்று வயதினிலேயே தமிழீழத்தின அடிமைத்தளையை எப்படி ஒளித்துக்கட்டுவது என்ற ஏக்கமும் தவிப்பும்அவன்நெஞ்சில் அலைமோதிற்று. அறப்போராட்டங்கள் நடைபெற்ற காலம்.

1958 ல் அமிர்தகழியில் ஜெயத்தின் அண்ணன் காசி ஆனந்தன் சிங்கள சிறீலங்கா அரசால் கைதுசெய்யப்பட்டு வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்தார். வாசலில் பொலிசார் காவலில் நிறுத்தப்பட்டிருந்தார்கள்கள். ஜெயம் அந்த நாட்களில் பொலிசாரின் கட்டுப்பாட்டை மீறி அவர்களுக்குத் தெரியாமல் அண்ணனின் கடிதங்களை வெளியே எடுத்துச் செல்வான்.

நகரத்திற்கு தொலைவில இருந்த மூலைப்புறக் கிராமங்களுக்கு எல்லாம் சின்னவயதிலேயே மிதிவண்டியில் போய் விடுதலை விதையை நட்டவன் ஜெயம்.

மட்டுநகர் அரசினர் கல்லூரியில (இந்துக் கல்லூரி) படித்த நாட்களில் அவன் நகர்ப்புற மாணவர்களை விடுதலை உணர்வில் தோய்த்தெடுத்தான்.

படிப்புமுடிந்து மகேரிபா நேயத்தடுப்பு வெளிக்கள அலுவலராக பணியாற்றிய காலத்தில் புல்லுமலை கட்டுமுறிப்பு- புலிபாய்ந்தகல்- வடமுனை போன்ற தமிழீழத்தின் எல்லைப் புறக் கிராமங்களில் எல்லாம் தமிழீழ உணர்வை பரப்பினான் ஜெயம்.

ஆயுதப்போர் ஒன்றின் மூலம்ம தமிழீழத்தின் விடுதலையைப் பெறமுடியும் என்ற நம்பிக்கை ஜெயத்தின் நெஞ்சில் ஆழப்பதிந்திருந்தது.

1975ல் சிறீலங்கா பொலிசார் அவனை கைது செய்தனர். மட்டக்களப்பில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த ராஜன் செல்வநாயகத்தை கொலை செய்ய முயன்றான் என்று அவன்மீது குற்றஞ்சாட்டப்பட்டது. கொழும்பிலிருந்த சிறீலங்கா அரசின புலனாய்வு தலைமை நிலையமான நாலாவது மாடிக்கு ஜெயம் கொண்டு செல்லப்பட்டான.

பிற்காலத்தில் விடுதலைப் புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட சி ஐ டி. இன்ஸ்பெக்டர் பஸ்தியான்பிள்ளை தலைமையில் விசாரணை நடந்தது. கொடுமையான சித்திரவதைகளின் பின்பு இரண்டு ஆண்டுகள் போகம்பரை, வெலிக்கடை சிறைச்சாலைகளில் கொடியசிறைவாசத்தை அனுபவித்தான். இக்காலத்தில்தான் அவன் வாழ்வில் மிக்க துயர் நிறைந்த நிகழ்வு இருந்தது கூடப்பிறந்த அண்ணன் காசிஆனந்தனுடன் தனது தம்பி சுதர்சனுடனும் ஒரே அறையில் ஒன்றாகப்வ சிறைவாசத்தை அனுபவித்தான்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டத்தில் முதல் வளைய உறுப்பினர்களை 1978 ல் ஜெயந்தான் சேர்த்துக்கொடுத்தான்.

எழு கதிர் மண்ணில் இது ஒரு தொடக்கம்.

✻ ✻

8-10-1984 இல் ஒரு நிகழ்வு

புல்லுமலையில் இயக்கப் பணியில் ஈடுபட்டிருந்தபோது எதிர்பாராமல் சிறீலங்காப் படை ஜெயத்தைக்கைதுசெய்தது ஆனால்... அவன்தான் ஜெயம் என்பது அப்போது அவர்களுக்குத் தெரியாது. கல்லடி முகாமுக்குக் கொண்டு சென்றார்கள். தலைகீழாகத் தொங்கவிடப்பட்டு இரும்புக் கம்பியால் முரட்டுத்தனமாகத் தாக்கப்பட்டான்.

உடலின் மீது மின்சாரம் பாய்ச்சப்பட்டது. கடைசி வரை அவன் உறுதியாக இருந்தான

அவனை முஸ்லிமாக அடையாளப் காட்டும் பொய் அடையாள அட்டை முஸ்லீமின் கோலத்தில் குறுந்தாடி-கையில் திருக்குர்ஆன... ஒரு விடுதலைப்புலியின் ஒழுமையான கெரில்லாத்தந்திர உத்திகள்.. தலையாட்டிகளால் கூட அவனை அடையாளம் காணமுடியாமல் போய் விட்டது.

ஜெயம் விடுதலையானான். ஆனால்

அவன் கல்லடி முகாமில் இருந்தபோதே - வீட்டில அவனைத் தேடி சிறீலங்காப படை பாய்ந்தது. ஜெயத்தின் தங்கை சிவமலர், படைவெறியர்களால் கைது செய்யப்பட்டு கொடியசித்திரவதைகளுக்கு ஆளாக்கப்பட்டாள். ஓராண்டு காலம் அவள் சிங்களர்ச்சிறைகளில் கடும் சிறைவாசம் இருக்க நேர்ந்தது.

தொடக்கத்தில் விடுதலைப் புலிகளின மருத்துவப் பகுதியில் பணியாற்றிய ஜெயம்-பின்பு தலைமைப் பீடத்தால் மிகப்பொறுப்பு வாய்ந்த மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட நிதிப்பொறுப்பாளராக நியமிக்கப்பட்டான.

அடர்ந்த காடுகள் - சேற்று வயல் வெளிகள் - கொழுதத அலை எறியும் ஆழகடல்கள் நாலு திசைகளிலும் ஜெயம் சுழன்று பணியாற்றினான்.

ஒரு காலத்தில் —

அவன் மக்களுக்கு விடுதலை உணர்வை ஊட்டிய தமிழீழத்

(11-ம் பக்கம் பார்க்க)

www.eelamview.com

# எழுகதிர் மண்ணில்...

(10ம் பக்கத் தொடர்ச்சி)

தின் காட்டுப்பகுதில்- எல்லைப் புறக் கிராமங்கள் – பிற்காலத்தில் விடுதலைப் புலிகளின் உறுதிமிக்க தளங்கள் ஆயின

திருகோணமலை மாவட்டத்திலிருந்து மட்டக்களப்பு மாவட்டத்தினுள் நுழையும் காட்டுவழிப் பாதையை புலிகளுக்குத் திறந்தவன் ஜெயம். 1987 ஐப்பசியில் இந்தியப் படை - விடுதலைப்புலிகள் போர் தொடங்கிற்று. மட்டக்களப்பில் - உப்பாற்றில் இந்தியப்படையினர் அடிக்கடி மின்விசைப்படகில் போவதும் வருவதுமாக இருந்தார்கள்.

எழிலான மட்டுநகர் உப்பாறு தமிழீழ விடுதலைப் போராட்டவரலாற்றில் புலிகளை எத்தனையோ முறை காப்பாற்றி இருக்கிறது.

விடுதலைப் புலிகள் உப்பாற்றில் ஒரு குறிப்பிட்ட இடத்தில், நீரின் அடியில் கண்ணிவெடி வைப்பதென்று முடிவுசெய்தார்கள். சிரமமான அந்தவேலையை நீரின் ஆழத்தில் மூழ்கியோடி ஜெயமேசெய்து முடித்தான்.

கூப்பிடு தூரத்தில் இந்தியப் படைமுகாம் இருந்தது. பெருமுயற்சி. ஆனால்—இந்தியப் படைப் படகு உப்பாற்று வழியால் பின்பு ஏனோ ஓடவில்லை.

"அவர்கள் தப்பி விட்டார்கள்" என்று ஜெயம் குமுறினான். "நீரில் - வானத்தில் நிலத்தில் இந்தியப் படையை நிர்மூலம் செய்வோம்" என்று முழங்கினான் இவன்.

மண்பறிப்பாளராக வந்த இந்தியப்படையை முற்றாக வெறுத்தான் ஜெயம். உப்பாறு கடலோடு கலக்கும் இடத்தில் – 'கலங்கரை விளக்கம், அமைந்த முகத்துவாரத்தில்முகாமிட்டிருந்த இந்தியப் படையின் சப்பாலிஸ் படைப் பிரிவு 1988 வைகாசி 10 இல் தனது 17 வது ஆண்டு நிறைவை பெருவிழாவாக எடுப்பதாகவும் — பொதுமக்கள் இவ்விழாவில் கலந்து கொள்ள வேண்டும் என்றும் அழைப்பு விடுத்தது.

"எங்கள் பிணங்களின் மேல் இந்தியப்படைக்கு விழாவா?" என்று, எரிமலையாய் வெடித்தான் ஜெயம், புதுக்கவிதை ஒன்றை அவனே எழுதி — அதைத் துண்டறிக்கை வடிவில் மக்களிடையே பரப்பினான் – புயல் வீசிற்று.

பாவிகளே! விழாவைத்தா
கொண்டாடுகிறீர்?,
நன்று!
ஆனால்.... வெட்கமில்லாமல்
எம்மை ஏன் அழைத்தீர்?
விழாவா? விருந்தா?
நீங்கள் கொடுக்கும்
உணவு வகைகள்
எங்கள் சுதந்திரப் பசியைத்
தணிக்காது!
விழாவுக்காய் நீங்கள் போடும்
பந்தல்களை
எம்மை
விழாவைத்துக் கொல்லும்
பொறியாகவே நினைப்
போம்!
தன்மான முள்ள தமிழன்
உங்கள் விழாவில்
கலந்துகொள்ள மாட்டான்!"

மக்களை ஜெயத்தின் கருத்து; மன உணர்வால் உலுக்கிற்று. அந்த விழாவில் ஒரு தமிழன் கூடக்கலந்து கொள்ளவில்லை கவிஞனாகவும் – கலைஞனாகவும் இருந்தான் ஜெயம். அந்த ஆற்றல் அனைத்தும் தமிழீழ விடுதலைப் போருக்கே கருவி ஆயிற்று.

புலிகளின் முகாம்களில் வீரர்களுக்கு தெம்பூட்ட ஜெயம் புல்லாங்குழல் இசைப்பான்.

இளமாலை வேளைகளில் காட்டுமரங்களின் கீழ் அவர்கள் உட்காந்திருப்பார்கள்.

கரிய இலைக் கொத்துக்களின் ஊடே வழியும் ஞாயிற்றின் ஒளிக்கதிர்கள் கண்ணடித் துண்டுகளாய் விழும். கூடுநோக்கிவரும் குருவிகளின் 'கீச்' ஒலி இடையே எழும் ஜெயத்தின் குழலோசையில் புலிகள் மெய்சிலிர்ப்பார்கள்.

இளம் வயதில் பல மேடை நாடகங்களில் ஜெயம்நடிகனாய்த் தோன்றி மக்களிடையே இலட்சிய நெருப்பை அள்ளி இறைத்த நாட்களும் உண்டு.

புலிகள் - இந்தியப்படை போரின் போது கொடிய எதிரிகளின் படை முகாம்களுக்கு நடுவில் ஜெயம் புயலாக வீசினான்.

மட்டக்களப்பில் பல கிராமங்களில் மாறி மாறி வாழ்ந்த காலம்.

சாவதற்கு மூன்று தினங்களுக்கு முன்பு தன் அண்ணனுக்கு எழுதிய ஒரு கடிதத்தில் குறிப்பிடுகிறான்:

சுற்றிவளைப்புகளும் சித்திரவதைகளும் நடக்காத நாட்களே இல்லை. இங்கு இன்றும் ஒரு முகாம் அமைத்தார்கள். இந்தச் சிறு ஊருக்குள்ளும் இரு முகாம்கள் உண்டு.

குண்டுகளுக்கு நடுவில் தான் அந்த விடுதலைப்புலி குடி இருந்தது.

1988 ஐப்பசி 10.

கொடுமையானநாள் இருண்ட முகில்களால் வானம் மூடப்பட்டிருந்தது: தாளங்குடா கிராமத்தில் ஜெயம் இருந்தான்

காலை 7 மணி

அப்போது தான் குளித்துவிட்டு வந்து தலையைத் துடைத்துக்கொண்டிருந்தான ஜெயம் கடைசிக் குளிப்பு.

பின்புற வேலி ஓரத்தில் நாய்கள் வெறிகொண்டு குலைத்தன.

திடீரென தெருப்பக்கம் துப்பாக்கி முழக்கம் கேட்டது.



சிறீ

தன்னோடு கூட உயிராக்கும் தோழனாய் இருந்த விடுதலைப் புலி சிறீ இந்தியப்படையுடன் மோதுகிறான் என்பதை அவன் புரிந்து கொண்டான். ஆனால் அந்த துப்பாக்கி வேட்டோசைகள் சில வினாடிகளிலேயே அடங்கிப்போய் விட்டன

சிறியின் கதை முடிந்துவிட்டது

முரட்டுத்தனமான இரும்புக்காலடி ஓசைகள். இப்போது அவன் பக்கத்திலேயே கேட்டன. தப்பமுடியாதவாறு அவன் வளைக்கப்பட்டிருந்தான். வேலிகளை உடைத்துக்கொண்டு இந்திய படை வெறியர்கள் உள்ளே பாய்ந்தார்கள்;

அந்த வேங்கையின் கண்கள் குருதிச் சிவப்பாயிற்று.

கழுத்து மாலையில் தொங்கிய குப்பியை உறமிக் கடித்தான் ஜெயம். ஓய்வே இன்றி தமிழீழ மண்ணில் விடுதலைக்காய் முப்பது ஆண்டுகள் ஓடிச் சுழன்ற ஒப்பற்ற மேனி ஓய்ந்தது!

அந்த நாளை யாரால் மறக்க முடியும் ?

ஜெயத்தின் அமிர்தகழிவீட்டில்-கட்டிலில்- அவன் பிணமாய்க் கிடக்கிறான். எல்லோரும் அவனைச்சுற்றிவளைத்து உட்கார்ந்திருந்து அழுகிறார்கள் அவர்களில் ஒருத்தி... அவன் காதலி! ஒருபுல்லாங்குழலை இவன் பக்கத்தில் வைத்து அழுதுபுலம்புகிறாள்

ஜெயத்தின் வாழ்வில் ஓர் இனிய காதல் இருந்தது.

அந்தக் காதலும்
கண்ணீராய்... அழுகையாய்...

புதைகுழியில் ஜெயத்தை வைத்தபோது-அவன் ஆசையுடன் வாசித்து மகிழும் புல்லாங்குழலையும் பக்கத்தில் வைத்தே புதைத்தார்கள்.

— நியூட்டன்

# கிழக்கில் புலிகளின்..

(3ம் பக்கத் தொடர்ச்சி)

முனையிலிருந்து வரும் நெடுஞ்சாலை கல்லடிப் பாலத்தைத் தாண்டி மட்டுநகருக்குள்மற்ற பதுபிரவேசிக்கின் றதுவடக்கில் வாழைச்சேனையிலிருந்து நெடுஞ்சாலை ஒன்று மட்டக்களப்பு நகருக்குள் பிரவேசிக்கின்றது.

இந்த இரு தரைவழிப் பாதைகளிலும் நுளைவாயில்களில் தமிழ்த் தேசிய இராணுவம்காவல் செய்து வந்தது.

மட்டக்களப்பு நகருக்குள் நுழையும் இன்னுமொரு வழி என்றால் அது நகரைச் சூழ்ந்துள்ள வாவியைக் கடந்து செல்வதாகும். இது மிகவும் கடினமானதும், அபாயகரமானதுமாகும். அவ்விதப் வாவியைக் கடப்பதை தேசிய இராணுவம் அறியுமாயின் ஆபத்தானதுமாகும். அத்துடன் வாவியை கடந்து விடுதலைப்புலிகள் நகருக்குள் பிரவேசிப்பார்கள் என தேசிய இராணுவம் எதிர்பார்க்கவுமில்லை.

ஆனால் விடுதலைப்புலிகள் மிகவும் துணிச்சலுடனும், தந்திரோபாயத்துடனும் வாவியைத் தாண்டி நகருள் புகுந்தனர். நகருக்கு வெளியே தாக்குதலை எதிர்பார்த்துக் கொண்டிருந்த தேசியஇராணுவத்தினர் மீது புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர்.

இதே சமயம் மட்டக்களப்பு நகரத்திற்கூடாக பாய்ந்தோடும் பிரதான வீதியினூடாக தாக்குதலை நடாத்தி, நகரத்தை ஊடுருவிச் சென்று தமிழ்த் தேசிய இராணுவத்தை அடக்கினார்கள்.

மார்கழி 11, 12, 13ம் திகதிகளில் நடைபெற்ற பலத்த சண்டைகளின் போது புலிகள் தமிழ்த் தேசிய இராணுவத்தினர் மீது ஆதிக்கத்தை செலுத்தினர். தேசிய இராணுவத்தின் தலைவர்கள் மாறனும், பிரசன்னாவும் கொல்லப்பட்டனர். ஈ. பி. ஆர். எல். எவ் இன் மாகாண அமைச்சரான கிருபாகரனும் ரெலோ பாராளுமன்ற உறுப்பினரான ஜனாவும் தப்பி ஓடினார்கள். தேசிய இராணுவத்தில் பலர் கொல்லப்பட்டனர். சரணடைந்த தேசிய இராணுவ உறுப்பினர் ஒருவரால் புலிகள் உறுப்பினர் ஒருவர் சுடப்பட்டார். இதே போல் நீசன் என்பவரும் கொல்லப்பட்டார்.

இந்த மூன்று நாள் யுத்தத்தில் விடுதலைப்புலிகள் சார்பில் 16 வீரர்கள் உயிரிழந்தார்கள்.

"இப்போது தமிழ் தேசிய இராணுவத்தினரால் பதுக்கி வைக்கப்பட்ட ஆயுதங்களை புலிகள் தேடி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் விடுதலைப்புலிகளின் முன்னணி உறுப்பினர் ஒருவர் தெற்கில் குமணவிலிருந்து வடக்கில் வெருகல் வரையிலான பிரதேசத்தை நாங்கள் பூரண கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறோம். ஆயித்தியமலை, உன்னிச்சை முதலிய இடங்களில் இருந்த தேசிய இராணுவத்தினரின் சிறிய முகாம்களும் விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்கு உள்ளானது. அத்துடன் சிங்கள எல்லைக்கு அண்மையிலிருந்த – பொலநறுவை மாவட்டத்தைச் சேர்ந்த "ஏறாவூர் குளம் என்ற இடத்திலும் புலிகள் ஒரு பாரிய தாக்குதலை மேற் கொண்டனர்" என்று கூறினார். இதில் சிலர் கொல்லப்பட்டனர், பலர் கைது செய்யப்பட்டனர். தப்பியோடிச் சென்ற சிலர் பொலநறுவையில் சிறீலங்கா படையினரிடம் சரணடைந்தனர். கைது செய்யப்பட்டவர்களில் பலவந்தமாக தேசிய இராணுவத்தில் சேர்த்துக் கொள்ளப் பட்டவர்கள், தமிழ், முஸ்லிம் பிரமுகர்களின் முன்னிலையில் விடுதலை செய்யப்பட்டு அவர்களின் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்

விடுதலைப்புலிகளுடன் சேருவதற்கு விருப்பம் தெரிவித்தவர்களுக்கு கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது. திருப்திகரமாக நடந்துகொள்ளும்பட்சத்தில் அவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர்கள். இத்தாக்குதல்கள் ஒன்றாவது மக்கள் எவரும் கொல்லப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட விடுதலைப் புலிகளின் பொறுப்பாளர் கருணா அவர்களே இத்தாக்குதல்களை திட்டமிட்டதுடன் சில தாக்குதல்களுக்கு அவரே நேரடியாகத் தலைமை தாங்கி நடாத்தியுள்ளார் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளராக கரிகாலன் உள்ளார்.

இந்திய ஆக்கிரமிப்பாளர்களின கைக்கூலிகளை அப்புறப்படுத்துவதற்காக போரிட்ட அனைவருமே கிழக்கிலே பயிற்சி பெற்றவர்கள் இவர்கள் கிழக்கைச் சேர்ந்தவீரர்களாகும். இவர்களில் பெரும்பாலானோர் இந்திய-புலிகள் யுத்தத்தின் பின் புலிகளுடன் சேர்ந்து கொண்டவர்களாகும்.

இத்துடன் புலிகளைச் சேர்ந்த இருநூறுக்கு மேற்பட்ட முஸ்லீம் போராளிகளும் இத்தாக்குதலில் பங்குபற்றியிருந்தனர். இச்சண்டைகளில் பங்குபற்றிய ஹாஜா முகைதீன் (லெப். றியாஸ்)- இருக்கி ஏறாவூர், சியாத் சாய்ந்தமருது, அஸ்வர் அட்டாளைசேனை ஆகிய நால்வரும் வீரமரணம் அடைந்துள்ளனர்.

கிழக்கின் அனேக பகுதிகளை புலிகள் தம்கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றனர். கல்முனையிலிருந்து மட்டக்கப்புச் செல்லும் பாதையில் சுமார் 500 விடுதலைப் புலிகள் ஆயுதங்கள் சகிதம் அணிவகுத்துச் சென்றமை ஒரு கண்கொள்ளாக்காட்சியாக அமைந்திருந்தது.

ஓர் உயர் பொலிஸ் அதிகாரியாக இருப்பவர் கூறுகின்றார் "புலிகளைப் போன்று பயிற்சியும் திறமையும் எமக்கில்லை ஆயுதம் ஏந்த வேண்டாமென அவர்களை நாம் கேட்டுள்ளோம். ஆனால் மற்றைய குழுக்கள் காரணமாக அவர்கள் ஆயுதங்களை தொடர்ந்தும் வைத்திருக்கின்றனர். இப்பிரதேச மக்களும் அதைப் பொருட்படுத்துவதாக இல்லை ஆகவே தற்போதைய சந்தர்ப்பத்தில் அது சரியாகவே தென்படுகிறது"

(கனடாவிலிருந்து வெளிவரும் ஆங்கில சஞ்சிகையான தமிழர்களின் குரல் (voice of Tamils) மாசி மாத வெளியீட்டில் 'ஏர்னஸ்ட் சாமுவேல்' என்பவர் எழுதியகட்டுரையின் தமிழாக்கம்.)

# அன்னை பூபதி—

(2ம் பக்கத் தொடர்ச்சி)

னது எண்ணங்களை சிதறடித்தது. அன்னையின் உண்ணாவிரதப் போராட்டத்தின் ஒவ்வொரு நாளும் தமிழீழமெங்கும் மக்கள் எழுச்சியைத் தோற்றுவித்தது. சகல மக்களமைப்புகளும். நிறுவனங்களும் அன்னையின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து ஊர்வலங்களையும், உண்ணாவிரதப்போராட்டங்களையும் கூட்டங்களையும் நடாத்தினர். அனைத்து மக்களும் சேர்ந்து "அன்னையை சாகவிட வேண்டாம்" என இந்தியாவை வேண்டினார்கள். இந்தியா கேலி செய்தது. அன்னையின்போராட்டத்தை போலி என்றது.

தியாகத் தீ அணைந்தது
முப்பத்தோராவது நாள் ...

ஆயுதந் தரித்த இந்தியச் சிப்பாய்கள் சூழ்ந்து நிற்க, அன்னைபூபதியின் வார்த்தைகள் மெது மெதுவாக அடங்கிற்று.

தனது தேசத்து மக்களின் சுதந்திரத்திற்காகவும், சந்தோசத்திற்காகவும் அன்னை பூபதி தன்னையே தியாகம் செய்துகொண்டார்.

அன்னையின் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை


காந்தீயத்தைதத்தெடுத்துக் கொண்டவர்கள். அன்னையை சாகடித்தனர்.

தமிழீழ மக்களுக்கு
தாலாட்டுப் பாடிய தாய்
- தன்
தாய் மண்ணுடன் கலந்தாள்

www.eelamview.com

# வீர வணக்கம்


மேஜர் சோதியா


2 வது லெப் தரணி


மேஜர் காண்டீபன்


2 வது லெப் பாபு


மேஜர் அகத்தியர்


கப்டன் நடேஸ்


நரசிம்மன்


## வீர மரணமடைந்த தோழர்களுக்கு......

1-1-90 மேஜர் அகத்தியர் (எச். புவிநேசராஜா) கோட்டைக்கல்லாறு
1-1-90 கப்டன் முரளி
1-1-90 2 வது லெப் அலெக்ஸ் (இ. ரமேஸ்) ராசேந்திரன்குளம்
3-1-90 கப்டன் நடேஸ் (த. சிங்கராஜா) மட்டுவில்
3-1-90 2 வது லெப் பாபு (இ. பாபு) மட்டுவில்
5-1-90 வோடர் (வ. நடேசபிள்ளை) இயற்றாளை
10-1-90 லெப் பக்கி (ப. நந்தகுமார்) நாவற்குழி
10-1-90 லெப் விக்னா யாழ்ப்பாணம்
10-1-90 2 வது லெப் ஜெகன் (க. அகிலன்) எழுதுமட்டுவாள்
11-1-90 மேஜர் சோதியா (M. வசந்தி) கரவெட்டி
22 1-90 பவான் யாழ்பாணம்
22-1-90 நரசிம்மன் (ஜெ. விமல்ராஜ்ஜெயன்) பாசையூர்
22-1-90 தனேஸ் (அ சத்தியோகன் கன்னுகம்
22-1-90 ஜீவன் யாழ்ப்பாணம்
23-1-90 அன்பழகன் (மூ. இரவீந்திரன் பளை
24-1-90 கப்டன் தயாள் (க. தியாகராஜா) இன்னியா
26-1-90 சௌந்திரி (க சண்முகலிங்கம்) மயிலிட்டி

6-2-90 திருமலை கடலில் வீரமரணமடைந்த போராளிகள்

மேஜர் கமல் (கோ. அருளாநந்தம்) நிரியாய்
மேஜர் சுரேஸ் (சி. தயாளபதி) குச்சவெளி
மேஜர் மதி (அ. வரதராஜன்) குச்சவெளி
கப்டன் நேமி (ச பஞ்சலிங்கம்) குச்சவெளி
கப்டன் அன்ரன் (கு. இராமநாதன்) குச்சவெளி
கப்டன் மகேஸ் (பா. முகுந்தன்) திருகோணமலை
கப்டன் ரகு (ச. பிறேம்குமார்) நிரியாய்
கப்டன் குகன் திருகோணமலை
லெ திருபன் (கு. உதயகுமார்) சாம்பல்தீவு
லெப் இல்பேட் (அ. கொனிஸ்மல்) சாம்பல்தீவு
2வது லெப் சங்கர் இ. செல்வகுமார்) வட்டுக்கோட்டை
2வது லெப் சாந்தன் (றை. லிசான்) நிலாவெளி
2வது லெப் அசோக் (பொ. விக்கேஸ்வரன்) திருகோணமலை
வைரவன் (இ. கனேஸ்) சங்கானை
காந்தி (தி. சிவராஜா) குச்சவெளி
விஜி (பொ. லம்போதரன்) குச்சவெளி
மதி (வி. செல்வேந்திரன்) கங்குவேலி
குமார் (சி. சதீஸ்குமார்) திருகோணமலை
சொலி (பி. விமல்ராஜ்) திருகோணமலை
நவா திருகோணமலை
கருணா (இ வரதராஜன்) நிலாவெளி
சுரேம் (து. இராஜேந்திரன்) திருகோணமலை

7-2-90 2வது லெப் நீகன் (இ. சிவபாலன்) காரைநகர்
20-2-90 2வது லெப் தரணி (வி. காந்தலிங்கம்) இரான்
22-2-90 மேனன் (ஜெகதீஸ்வரன்) முள்ளியவளை
7-3-90 மேஜர் காண்டீபன் (ம காண்டீபன்) கண்டாவளை
19-3-90 ஹோறன்ஸ் (இ. ராசலிங்கம்) பாலையடிவெட்டை
22-3-90 விசைவீரன் மந்திரி (அ. அருனேஸ்வரன் காரைநகர்


சௌந்திரி


ஹோறன்ஸ்


2 வது லெப் றேகன்


விச வீரன்


மேனன்


ஜீவன்

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

www.eelamview.com